உ

ஸ்ரீ-கிருஷ்ணாயபரப்பிரமணேநம:

திருவேங்கடநாதரருளிச்செய்த

கீதாசாரத் தாலாட்டு.

மூலமும்

மடப்புரம், ஆ. செ. துரைச்சாமிநாயக்கர்
அவர்கள் வேண்டுகோளின்படி
பிரமானந்த சாகரசொரூபராகிய
ஸ்ரீ கோயிலூர்ச் சிதம்பர சுவாமிகள்
மாணாக்கராயும்,
திருவாரூரைச் சேர்ந்த வன்மீகபுரத்திலெழுந்தருளிய
ஸ்ரீ குருதக்ஷிணாமூர்த்தி சுவாமிகள்
ஆதீனத்திற்குரியவராயுமுள்ள,
மதுரை

சிவானந்தசுவாமிகளியற்றிய உரையும்.

———:0:———

மேற்படிசுவாமிகள் மாணாக்கராகிய,
நாகப்பட்டணம் றெயில்வே ஸ்டேஷன்மாஸ்டர்
திரிசிரபுரம், ரீ. சண்முகம்பிள்ளையவர்களால்
மகாராணியவர்கள் கைத்தொழிற்பாடசாலை அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

விகுருதிளு-தைமீ.
1891.

விலை அணா-4.]

Copyright.

உ

சிவமயம்.

கீதாசாரத்தாலாட்டு.

உரைச்சிறப்புப்பாயிரம்.

இஃது

தேவிகோட்டை

வீ. ர. லெ. சின்னயச்செட்டியாரால்

இயற்றப்பட்டது.

போதார்பொழில்சூழ்வன்மீகபுரத்திற்பொலியுஞ்செங்கழுநீர்
மாதார்த்தட்சிணமூர்த்திமடத்துக்கதிபன்றுரியநிலை
மீதாய்த்திகழுஞ்சிவானந்தமேலோன்விரித்தமெய்யுரையாற்
கீதாசாரத்தாலாட்டுக்கிளர்ந்தோங்கியதுநீணிலத்தே

இஃது

உரைப்பாயிரம்

தெய்வங்களின் வணக்கம்

ஐங்கரனறுமுகனருண்மிகுமம்பிகை
சங்கரனயனரிதமைவணங்குதுமே

குருவணக்கம்

—:O:—

நிதம்பரமாயொளிர்நின்மலமோனச்
சிதம்பரகுருபதந்தினம்பணிகுதுமே

அடியார்கள்வணக்கம்

—:O:—

சிதம்பரதேசிகன்செய்யபொற்கமலப்
பதம்பரமெனநினைபவர்பதம்பணிகுதும்

அவையடக்கமும், உரையின்பிரயோசனமும்.

:o:

நங் குருநாதனந்தம்நாவினின்றியற்றுவித் த
பங் கமில்கீதாசாரப்பாக்கடமுறையுட்கொள்வோர்
சங் கரனயன்மால்தேவர்சகலரும்புகழ்வதா ன
துங் கமார்சீவன்முத்திச்சுகமனுபவிப்பர்தா மே

அவதாரிகை.

வடமொழி தென்மொழியில் வல்லமையுள்ள திருவேங்கடநாதனென்னு நூலாசிரியர், தமது பெருங் கருணையினாற்கூறப்புகுந்த விந்நூலானது, நிர்விக்கினமாய் நிறைவேறிப்பெரியோர்களா லங்கீகரிக்கப்பட்டுப் படிப்பவர் கேட்பவர்கட்கே காக்கிரமுதலியனவோ டகற்றுவிக்கு ஞானம் பாலித்துப்பாரம்பரியமாய் வழங்கிவரும் பொருட்டுத் தமது வழிபடு கடவுளாகிய ஸ்ரீகிருஷ்ணபகவானை ஞானசூரியனைத் துதிக்கின்றார்.

ஐவகைப்பொருளுநான்குகரணமுங்குணங்கண்மூன் றுந்
செய்வினையிரண்டுமொன்றியாவருந்திகைக்கப்டாகின் ற
பொய்யிருளகலஞானப்பொருட்கதிர்விரித்தபுக்கிரு ள்
கைவளையாழிச்செங்கட்கண்ணனைக்கருத்துள்வைப்பா ம்

இதன்பொருள்.

*ஐவகை-ஐந்துபிரிவாகிய, பொருளும் - பொருட்களையும், நான்குகரணமும்(சங்கற்ப-நிச்சய அவதான - அபிமானமென்னுந்தொழில்களையுடைய) அந்தக்கரணசதுட்டயத்தையும், குணங்கண்மூன்றும் - (பிரகாசம - பிரவிருத்தி மோகமேசொரூபமாயுள்ள-சாத்விக-இராஜச - தாமதமென்னும்) திரிகுணங்களையும், செய் - (மனவாக்குக்காயங்களாற்) செய்யப்பட்ட, வினையிரண்டும் (புண்ணியபாவமா

கிய) உபயகன்மங்களையும், ஒன்றி - யானென தென்பதா கப்பொருந்தி, யாவரும் - சருவத்திரர்களும், திகைப்ப மயங்குதற்குக் காரணமாக, நின்ற - (மறைப் பேசொருப மாக) நிற்கின்ற, பொய்யிருள்-மித்தையாகிய அஞ்ஞானாந்தகாரமானது, அகல -பரிபக்குவர்கட்கு நிவிர்த்தியாகும்படி, ஞானப்பொருட்கதிர்-ஞானார்த்தங்களாகிய கிரணங்களை, விரித்த-பரப்பிய, புத்தேள்-தெய்வமாயுள்ள, வளை- (பாஞ்சசன்னியமென்னும்) சங்கையும், ஆழி - (சுதரிசனமென்னும்) சக்கரத்தையுந்தரித்த, கை-திருக்கரங்களையும், செங்கண் -சிவந்த (தாமரைமலர்போன்ற) நேத்திரங்களையுமுடைய, கண்ணனை-(ஞானதினகரனென்னும்) ஸ்ரீகிருஷ்ணபகவானை, கருத்துள் வைப்பாம் - இருதயத்தினுள் அபேதமாகவைத்துத்தியானிப்பாம்-(என்றவாறு.)

பொருளும், மூன்றும், இரண்டும், என்பவைகளில் இரண்டனுருபும். கரணமும், என்றதில் சாரியையும் - இரண்டனுருபும் தொக்கன;;

*சத்தஸ்பரிசாதி விஷயங்கள் (௧) சுரோத்திராதிஞானேந்திரியங்கள், (௨) வியானாதிவாயுக்கள் (௩) வாக்காதிகன்மேந்திரியங்கள் (௪) சருமாதியாறுதத்துவமாகிய தூலசரீரம் (௫) இவ்வைந்து பிரிவாகிய பொருட்களையே தொகுத்து ஐவகைப்பொருளுமென்றார்.

ஆக்கியோன்பெயரும், முதனூற்பெயரும், நூற்பெயருங்கூறல்.

—:o:—

வெண்பா.

மாறையர்கோன்வேதகவிஸ்வாய்வேங்கடநாத ன்
காதையுறப்பார்த்துலுக்குக்கண்ணனருள் கிதைக்
கருத்துயர்தாலாட்டாகக்கட்டுரைத்தான்யாரு ங்
கருத்துயர்நீங்கெய்துக்க தி

அவையடக்கமும், உரையின்பிரயோசனமும்.

———:o:———

நங் குருநாதனந்தம்நாவினின்றியற்றுவித் த
பங் கமில்கீதாசாரப்பாக்கடமுறையுட்கொள்வோர்
சங் கரனயன்மால்தேவர்சகலரும்புகழ்வதா ன
துங் கமார்சீவன்முத்திச்சுகமனுபவிப்பர்தா மே

அவதாரிகை.

வடமொழி தென்மொழியில் வல்லமையுள்ள திருவேங்கடநாதரென்னு நூலாசிரியர், தமது பெருங் கருணையினாற்கூறப்புகுந்த விந்நூலானது, நிர்விக்கினமாய் நிறைவேறிப்பெரியோர்களா லங்கீகரிக்கப்பட்டுப் படிப்பவர், கேட்பவர்கட்கே காக்கிரமுதலியனவோ டக்குவித ஞானம் பாலித்துப்பாரம்பரியமாய் வழங்கிவரும் பொருட்டுத் தமது வழிபடு கடவுளாகிய ஸ்ரீகிருஷ்ணபகவானை ஞான சூரியனைத்துதிக்கின்றார்.

———

ஐவகைப்பொருளுநான்குகரணமுங்குணங்கண்மூன்று ந்
செய்வினையிரண்டுமொன்றியாவருந்திகைப்பநின் ற
பொய்யிருளகலஞானப்பொருட்கதிர்விரித்துப்புந்தே ள்
கைவளையாழிச்செங்கட்கண்ணனைக்கருத்துள்வைப்பா ம்

இதன்பொருள்.

*ஐவகை-ஐந்துபிரிவாகிய, பொருளும் - பொருட்களையும், நான்குகரணமும்(சங்கற்ப-நிச்சய-அவதான - அபிமான மென்னுந்தொழில்களையுடைய) அந்தக்கரணசதுட்டயத்தையும், குணங்கண்மூன்றும் (பிரகாசம - பிரவிருத்தி மோகமேசொரூபமாயுள்ள-சாத்வீக-இராஜத - தாமதமென்னும்) திரிகுணங்களையும், செய் - (மனவாக்குக்காயங்களாற்) செய்யப்பட்ட, வினையிரண்டும் (புண்ணியபாவமா

கிய) உபயகன்மங்களையும், ஒன்றி-யானென தென்பதா
கப்பொருந்தி, யாவரும் - சருவத்திரர்களும், திகைப்ப
மயங்குதற்குக் காரணமாக, நின்ற-(மறைப் பேசொருப
மாக) நிற்கின்ற, பொய்யிருள்-மித்தையாகிய அஞ்ஞானு
ந்தகாரமானது, அகல -பரிபக்குவர்கட்கு நிவிர்த்தியாகும்
படி, ஞானப்பொருட்கதிர்-ஞானார்த்தங்களாகிய கிரணங்
களை, விரித்த-பரப்பிய, புத்தேள்-தெய்வமாயுள்ள, வளை-
(பாஞ்சசன்னியமென்னும்) சங்கையும், ஆழி - (சுதரிசன
மென்னும்) சக்கரத்தையுந்தரித்த, கை-திருக்கரங்களையும்,
செங்கண்-சிவந்த (தாமரைமலர்போன்ற)நேத்திரங்களையு
முடைய, கண்ணனை-(ஞானதின கரனென்னும்) ஸ்ரீகிரு
ஷ்ணபகவானை, கருத்துள் வைப்பாம் - இருதயத்திலுள்
அபேதமாகவைத்துத்தியானிப்பாம்-(என்றவாறு.)

பொருளும், மூன்றும், இரண்டும், என்பவைகளில் இரண்ட
னுருபும். கரணமும், என்றதில் சாரியையும் - இரண்டனுருபும்
தொக்கன;;

*சத்தஸ்பரிசாதி விஷயங்கள் (௧) சுரோத்திராதிஞானேந்திரி
யங்கள், (௨) வியானாதிவாயுக்கள் (௩) வாக்காதிகன்மேந்திரியங்
கள் (௪) சுருமாதியாறுதத்துவமாகிய தூலசரீரம் (௫) இவ்வைந்து
பிரிவாகிய பொருட்களையே தொகுத்து ஐவகைப்பொருளுமென்
றார்.

ஆக்கியோன்பெயரும், முதனூற்பெயரும், நூற்பெயருங் கூறல்.

வெண்பா.

மாலையர்கோன்வேதகவிஸ்வாய்வெங்கடநாத ன்
காலையுறப்பார்த்தறுக்குக்கண்ணனருள் கீதைக்
கருத்துயர்தாலாட்டாகக்கட்டினான்யாரு ங்
கருத்துமார்நீங்கெய்துக்க தி

(இ-ள்)

∴ மாதையர்-மாதைப் பதியிலுள்ளவர்களுக்கு, கோன்-அரசனாகிய, *வேதநவில்-வேதாத்தியயனம் பண்ணுகின்ற, வாய்-வாக்கினையுடைய, வேங்கடநாதன்-திருவேங்கடநாதனென்னும்பிராமண சிரேஷ்டரானவர், காதையுற-சொற் சுவைபொருந்த, பார்த்தனுக்கு-அருச்சுனனுக்கு, கண்ணன் - ஸ்ரீ கிருஷ்ண பகவான், அருள்-அனுக்கிரகம் பண்ணிய, கீதை-பகவற்கீதையினது, கருத்து-தாற்பரிய மாகிய (ஞானார்த்தங்களை), உயர் † தாலாட்டாக-மேன்மைபொருந்தியதாலாட்டுப்பிரபந்தமாக, ‡ யாரும்-சருவத்திரர்களும், கருத்துயர்தீர்ந்து-ஜன்மதுக்கமானது நீங்கப் பெற்று, கதி-மோக்ஷத்தை, எய்த-அடையும் பொருட்டு, கட்டுரைத்தான்-உறுதிமொழியாகக்கூறினார் (எ-று)

*வேதநவில்வாய்வேங்கட நாதனென்றமையின் வேதாத்தியயனஞ்செய்குதல் பிராமணர்கட்கேமிகவுமுரித்தென்பதுபற்றி யுரையிற் பிராமணனென விரித்தெழுதினாம்.

†பதினெட்டத்தியாயங்களாற் கன்மம், பத்தி-ஞானார்த்தங்களை மிச்சிரமாய்க்கூறியுள்ள பகவற்கீதையின்கண்-கரும்பினின் றுமிரசத்தைக் கிரகித்தல்போல அந்தரங்கமான ஞானார்த்தங்களைச்சங்கிரகித்துத் தாலாட்டுப்பிரபந்தமாகக்கூறினமையின் இது கீதாசாரத்தாலாட்டெனும் பெயருடைத்தாயிற்று.

‡தீவிரதர அதிகாரிகட்குப் பயன்படுதலுமன்றி மந்தாதிகாரிகட்குமினிதுவிளங்கிப்பயன்படுமென்பதுதோன்ற-யாருமென்றார்

∴ மாதைப்பதி யென்பதைச்சிலர் மாதேவிப்பட்டணமென்றும் சிலர்திருவாமாத்தூரென்றுங் கூறுவார்கள்.

நூல்.

சீராரும்பரமார்த்ததெரிசனத்தையருள்செய்யப்
பேராருந்தேசிகராய்ப்பெருமானேவந்தவரோ ... (க)

இ - ள்.

(a.) பெருமானே- (ஸ்ரீபகவானாகிய எமது)பிரானே,சீராரும்-சச்சிதானந்த கனமாகிய) சிறப்பினைப் பொருந்திய, பரமார்த்ததெரிசனத்தை - எதார்த்தமாயுள்ள ஆத்மதரிசனத்தை, அருள்செய்ய - அருச்சுனனுக்கு அனுக்கிரகஞ் செய்யும் பொருட்டு, *பேராரும்-பெருமை நிறைந்துள்ள, தேசிகராய்-ஞானாசாரியராக, b. வந்தவரோ—எழுந்தருளி வந்தவரோநீர், (எ-று)

a. பெருமானேயென்பது விளி

b. வந்தவரோவெனச்செய்யுளினீற்றிலுள்ள- ஓகாரம்வியப்புப் பொருளது-நன்னூல் - இடையியலில்-இரண்டாம்சூத்திரம்-இன்னன வென்றதனால்—பின்வருவனவுமிவ்வாறே.

*சிருட்டியாதி பஞ்சகிருத்தியங்களில் சிருட்டி, திதி, சம்ஹாரம், திரோபவமென்னு நான்கினாலுஞ்சம்சாரதுக்க நிவிர்த்தியாகாது அனுக்கிரகமொன்றினால் மாத்திரம் நிவிர்த்தியாகின்றமையா லனுக்கிரகமொன்றுமே பெருமையுடைத் தென்பது கூறுமேயமையும் அவ்வனுக்கிரகத்தைக்குரு மூர்த்தமாகவேயிருந்து செய்வதுமரபாயிருத்தலின் குருமூர்த்தியே பெருமையுடையாரென்பது தோன்றப், பேராருந்தேசிகராயென்றார்.

திருத்தேரிற்சாரதியாய்ச்சேர்ந்திருந்துங்கீதையினை
லருச்சுனற்குமெய்ஞ்ஞானமனைத்துமுரைசெய்தவரோ (உ)

இ - ள்.

*திருத்தேரில்-சிறப்புப்பொருந்திய இரதத்தில், சாரதியாய் - தேர்ப்பாகராய், †சேர்ந்திருந்தும் - பொருந்தியிருந்

தும், கீதையினால்-இசைபொருந்தியவுபதேசரூபமான அமதுவாக்கியத்தால், அருச்சுனற்கு-பார்த்தனுக்கு, மெய்ஞ்ஞானம்-தத்துவஞானம், ‡அனைத்தும்-முழுவதும், உரைசெய்தவரோ-அனுக்கிரகஞ்செய்தருளியவரோநீர் (எ-று)

*அருச்சுனனுக்குக் காண்டவதகன சமயத்து அக்கினிபகவானாற்கொடுக்கப்பட்டு நவரத்தினகசிதமாகிய சுவர்ணத்தூபிவைத்துச் சுவேதவாம் புரவிகள் பூட்டியனுமத்துவஜம்நாட்டப்பெற்ற அழியாத இரதமானதால்-திருத்தேரென்றார் - இன்னும் சச்சிதானந்த சொரூபமாகிய ஸ்ரீகிருஷ்ணபகவானே ஞானாசாரியமூர்த்தமாக எழுந்தருளியிருந்து சத்தியவிரதனாகிய அருச்சுனனுக்குப் பிரமாண்மைக்கிய ஞானோபதேசஞ்செய்தற்குஸ்தானமாக அமைதலின் திருத்தேரெனக்கூறினாரெனினும் அமையும்.

†சேர்ந்திருந்துமென-இதிவு சிறப்பும்மை கொடுத்துக்கூறியது யாதினாலெனின், ஆசாரிய சிஷ்யக்கிரமம் பிறழ்ந்தமையினென்க அஃதாமாறு-தலையுரோமத்தினெருப்புப்பற்றப் பெற்றவனும் சில தினமுபவாசமிருந்தவனும் யாதொன்றையும் விரும்பாதுஜலம், அன்னமிவைகளையே அதிவிரைவாக விரும்பித்தேடிச்செல்வதுபோல ஜனன மரண சம்சாரத்தால் வருந்துபவன் அதனை நிவிர்த்திக்கத் தக்க ஞானாசாரியரெங்குளரெனத்தேடி வந்தஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்கார பூர்வகமாக வணங்கியெழுந்து வாக்கினாற் பலவாறு துதித்துத் தனக்குக்கிருபை வருமளவும் ஆத்தமுதலிய பணிகளைச்செய்துவருகிற சாதன சதுட்டயமுள்ள சீடனதிதீவரபக்குவனாக இருப்பின் ஏகாந்த ஸ்தானத்தில் அச்சீடன் மிகுந்த பயபத்தி விநயத்தோடு கைகட்டி வாய் புதைத்துத் தாழ்ந்த ஸ்தானத்தினின்று கேட்பத்தானுயர்ந்த வாசனத்தின் கண்ணிருந்து ஞானோபதேசஞ் செய்வது ∴.மரபாயிருக்க அங்ஙனமின்றி அருச்சுனனிருக்குமிடத்திற்குத்தான் வந்து அவனது ஏவற்றொழில் செய்யுஞ்சாரதியாய்ப் பலருங்கூடிய யுத்தகளமத்தியிற் சென்றுள-இரதத்திற்பாசமனத்தினானை-அருச்சுனன் உன்னத ஸ்தானத்திருந்து கேட்பத்தான் தாழ்ந்த ஸ்தானத்திலொருபதமடித்தொருபதம் பொற்றேர் மிதித்

தொருகையிற் கசை குசைபிடித்தொருகையிற் சின்முத்திரை கொண்டிருந்துப தேசித்தமையால் சேர்ந்திருந்தும் என அவ்வுண்மை புணர்த்தாரென்றுணர்க.

∴ மரபென்பது தொன்றுதொட்டு வழங்குமுறைமை.

‡பரோக்ஷஞானம்-அபரோக்ஷஞானமென ஞானமிரண்டாம் அவற்றுள் அபரோக்ஷ ஞானமானது-அதிடாபரோக்ஷ ஞானமெனவும்-திடாபரோக்ஷ ஞானமெனவு மிருவகைப்படுமிவை முழுதுமுபதேசித்தாரென்பது தோன்ற மெய்ஞ்ஞானமனைத்துமென்றார்.

செஞ்சமரிற்பந்துஜனஞ்சேதமுறுமென்றிரங் ... கி
யஞ்சியபார்த்தன்பயமாங்ககற்றவருளானோக்கி ... (கூ)

இ-ள்

* செஞ்சமரில்-செவ்விதாகியயுத்தத்தில், பந்துஜனம்-உறவினர்களாகிய யாவர்களும், சேதமுறு மென்றிரங்கி-நாசமடைவார்களென்றிரக்கமுற்று, † அஞ்சியபார்த்தன்-பயந்துள்ள அருச்சுனனது, பயம்-பீதியை, ஆங்கு-அந்த யுத்தகள மத்தியிற்றானே, அகற்ற-நிவிர்த்தி செய்தற்கு, ‡ அருளால்-கிருபையோடு, $நோக்கி-பார்த்து,(எ-று)

* பாண்டவர்கள்செய்யுஞ் சமர்தர்மசாஸ்திரத்தையனுசரித்ததாகலின்செஞ்சமரென்றார்.—

† நம்குருவாகிய துரோணர், கிருபர் முதலியவர்களும் நம்குலத்திலுதித்த வீட்டுமர் துரியோதனாதியருமிவர்கட்குபபலமாக வந்தசுசனப்பரசனர்களாகிய மற்றைத்தேசத்தரசர்களும் தங்கள் தங்களுக்குரியசுகபோகங்களை யிழந்திந்த யுத்தகளத்தினம்மால் மரணமடைவார்களே-மரணமடைந்தாலிவர்களா லிரட்சிக்கப்பட்டுள்ள யாவர்களுந் துன்பமுறுவதுமன்றி யிவர்களாற் செய்யப்பட்டுவருகிற குலதருமங்களும் நாசமடையும்அவைநாசமடையவே குலங்கண் முழுதுமதன்மத்திற் பிரவர்த்திக்கும்அதனால் ஸ்திரிகள் நெறிதவறுவார்கள் அதனால் வர்ணசங்கரமாகும் அதனாலவர்கள் நரகமடைவதுமல்லாம

லவர்களின் பிதிர்கணங்களும் பிண்டோதகங்களாற் செய்யப்படும் சிராத்ததருப்பணாதிகளா லுண்டாகும் பலனை யிழந்து துன்பமுறு வார்கள் இவைகளனைத்திற்கு நாமே காரணமாதலின் நம்மைக்குல க்ஷய கிருததோடம் வந்தடைந்து நரகிலமிழ்த்துமென்றச்சமுற்றவ ருச்சுனனென்பார் அஞ்சிய பார்த்தனென்றார்.

§அருச்சுனன் மோகத்தாலடைந்துள்ள பயம் நீங்கியாத்மஞான பரனாய்ச் சுதர்மங்களைச்செய்துவரு நிமித்தந் திக்ஷாக்கிரமமாக அரு ச்சுனன்மீது பகவான் பூரண திருஷ்டிவைத்தமைதோன்ற நோக் கியென்றார்.

‡பகவான் தனக்கேதேனுமோர் பிரதியுபகாரங்களை யபேக்ஷியா டனுக்கிரஹனென்பதுவிளங்க அருளால்நோக்கியென்றார்.

சுற்றமறிற்சோகமெனச்சொல்லினைசற்றறிந்தவன் போற்
கற்றுணர்ந்தபேரதனாற்கலங்கார்காணென்றவரோ (௪)

இ-ள்.

சுற்றமறில்-பந்துவர்க்கங் கணாசமடையுமானால், சோக மென-துக்கம் (வந்துபொருந்து)மென்று, *சற்றறிந்தவன் போல்-கிஞ்சித்துச் சாஸ்திரந்தெரிந்தவன்போல, சொல் லினை-கூறினாய், கற்று-(கற்கவேண்டியசாஸ்திரங்களைக்)கற் று, உணர்ந்தபேர்-(அறியவேண்டியவைகளை)யறிந்தமகான் கள், அதனால்-பந்துவர்க்கங்கட்குநேரிடுங்கெதியினால், †கல ங்கார்-கலக்கமடையார்கள், காணென்றவரோ-அதனை நீ அறிவாயாகவென்று கூறியருளியவரோநீர் (எ-று)

*தன்னுடைய தேகாதிகட்கு நேரிடுங்கெடுதிகள் பற்றியே தனக் கொருகெடுதியும் வாராதென்பது சுருதியுத்தி யனுபவங்களுக்கொ த்த துணிபாயிருக்க அன்னியர் தேகாதிகட்கு நேரிடுங்கெடுதிகள் பற்றித்தனக்குங்கெடுதிகள் நேரிடுமென்னும்மாயாகாரியங்களாகிய தேகாதிகட்கும் அறிவுசொருபமாகிய ஆத்மாவிற்குமெதார்த்தத்தில் யாதொருசம்பந்தமுமின்றென்றும் க்ஷத்திரியர்கட்குத் துட்டநிக்கி ரகத் சபதங்காத்தன்முதலியசுதர்மங்களைக்கைவிடுதல் பாவமென

வும் அருச்சுனன் மோகத்தாலற்பமேனுமறியாமல் துட்டர்களாகிய துரியோதனாதியரைக்கொல்வது பாவமெனவும் அப்பாவத்தாற்று ன்பம் வருமெனவுங் கூறினமையாற் சற்றுமறியாதவனென்பது தோன்றச் சற்றறிந்தவன்போலென்றார்.

†ஓரவத்தை மற்றோரவத்தையினிலைபெறாது கெடுதலையுறுகின் றமையின் அவத்தாத்திரயப் பிரபஞ்சங்களனைத்தும் எந்தவேது க்களினானு நிலைபெறாதழியத்தக்கனவெனவும் சுத்திகாரசிதங்கான ற்சலம்போல் மித்தையெனவும் ஆத்மா அவத்தாத்திரயங்களொன் றிலொன்று நிலைபெறாதுகெடுதலையுறினும் தான்கெடுதலுறாமலவை களைச் சாட்சிமாத்திரமாகவிகாரமின்றியறிந்து கொண்டிருத்தலின் எந்தக்காலத்திலும்எந்தவேதுக்களினானுமழிவையுறாது நித்தியமாயி ருக்கத்தக்க சத்தியப்பொருளெனவும் சுருதி-யுத்தியனுபவங்களாலறிந்த பெரியோர்கள் தேகாதிப்பிரபஞ்சங்கட்கு நேரிடுங்கெடுதிக ளைக்கண்டு கலக்கமுறார்களானமையின் கற்றுணர்ந்தபேரதனாற் கல ங்கார்காணென்றார்.

கலங்காரோவிறப்புவரிற்கற்றுணர்ந்தபேரோ ... ௩௰
மலங்காமனானிருக்கும்வகையுரையுமெனவினவ ... (௫)

இ-ள்.

இறப்புவரில்-மரணம் வந்தகாலத்து, கற்று-கற்கவேண்டிய வைகளைக் கற்று, உணர்ந்தபேரோனும், அறியவேண்டிய வைகளை யறிந்த மகான்களாயினும், கலங்காரோ - கலக்க முறார்களோ— (கலக்கமுறாதிருப்பார்களாகி லவர்களைப் போல) நான்-யானும், மலங்காமல்-மயக்கமுறாமல், இருக் கும்வகை-இருக்கத்தக்கதாகிய வுபாயங்களை, உரையுமென வினவ-அடியேனுக்கனுக்கிரகம் பண்ணுமென்றருச்சுனன் கேட்க,-எ-று).

நான், என்பதில் இறந்தது தழுவிய எச்சவும்மைவிகாரத் தாற்றொக்கது.

ஸ்ரீ தாசாரத்தாலாட்டு.

நீயுநானும்புவிமேலிருபர்களுமெய்யுணர் வா
லாயுங்காற்பிறந்திறப்பதார்க்குமில்லையென்றவரோ (௬)

இ-ள்.

நீயும் - அருச்சுனனாகிய நீயும், நானும் - பகவானாகியயானும், புவிமேலிருபர்களும்-பூமியின் கண்ணுள்ள அரசர்களுமாகிய, ஆர்க்கும்-எவர்களுக்கும், மெய்யுணர்வால்-உண்மை ஞானத்தால், ஆயுங்கால்-விசாரிக்குமிடத்து, பிறந்திறப்பது - ஜனித்துமரிப்பது, இல்லையென்றவரோ-இல்லையென்று கூறியருளியவரோநீர், (எ-று).

உம்மை நான்கில் ஈற்றிலுள்ளது முற்றும்மை ஏனையஎண்ணும்மையாம்.

ஈங்கெவர்க்கும்பிறந்திறப்பதில்லையென்றீரிவ்வுல கி
னீங்குபவம்யார்க்கிதனைநிச்சயமாய்ச்சொல்லுமென (எ)

இ-ள்.

ஈங்கு-இவ்விடத்தில்; எவர்க்கும்-சருவத்திரர்களுக்கும்; பிறந்திறப்பதில்லையென்றீர்-ஜனித்துமரிப்பதின்றென்றுகூறினீர்; இவ்வுலகில் - இவ்வுலகத்தின் கண்ணே; நீங்குபவம்-மரித்தல் ஜனித்தலானவை; யார்க்கு-எவர்களுக்குள்ளன; இதனை-இவ்வுண்மையை; நிச்சயமாய்ச்சொல்லுமென உறுதியாகச்சொல்லுமென்றருச்சுனன்கேட்க; (எ-று)

ஈங்கு-சுட்டுநீண்டுவந்தது செய்யுளாதலின், நீங்குதல்; என்னுந்தொழிற்பெயர் இங்கே-நீங்கு-எனமுதனிலை மாத்திரையாய்நின்றது.

இத்தரையிற்பிறந்திறப்பதெடுத்தவுடற்கடுத்த பொறி
த்தியமாகியவான்மாவின்சொருபமென்றவரோ (அ)

இ-ள்.

இத்தரையில்-இப்பூமியின்கண்; பிறந்திறப்பது-ஜனித்துமரிப்பது; எடுத்தவுடற்கு-கருமத்துக்கேதுவாக வெடுத்த

ள்ள சரீரத்துக்கு; அடுத்தபொறி — பொருந்தியவிதியாம் *நித்தியமாகிய-(ஜனித்தல் மரித்தலின்றிநித்தியமாயுள்ள; ஆன்மா-ஆன்மாவே, நின்சொருப மென்றவரோ - உனது சொரூபமென்று கூறியருளியவரோநீர்-(எ-று)
ஆன்மா என்பதில் பிரிநிலை ஏகாரம் விகாரத்தாற்றொக்கது.

*பிராகபாவம் பிரத்தொம் சாபாவம் அன்னியோன்னியாபாவம்-அத்தியந்தாபாவமென்னு நான் கபாவமுமின்றிச்சதோதயமாயிருப்பதெதுவோ அதுநித்தியம் நித்தியமாயுள்ள ஆன்மாவே தானெனும்விசாரமறியவிரும்பில் எமதுகருணைக்கடலென்னும் பிரமானந்த சாகரசொரூபராகிய கோவிலூர்ச்சிதம்பரசுவாமிகள்செய்தருளிய இலக்கணவிருத்தியிற்காண்க-

---

அங்கமுயிரிந்தியநானன்றிவேறெனைக்கா - ணே
னிங்கியான்வேறுண்டேலெனக்கறியப்புகலுமென (௬)

இ-ள்.

அங்கம்-சரீரமும்; உயிர்-பிராணனும்; இந்தியம்-இந்திரியங்களும்; நானன்றி-யானென்றறிந்துளனேயல்லாமல்; வேறு-இவைகளுக்கன்னியமாக; எனைக்காணேன்-எனது சொரூபத்தைக்கண்டிலேன்; இங்கு-இச்சரீரங்களினிடமாக; யான்வேறுண்டேல் - எனதுசொரூபமிவைகட்கன்னியமாகவிருக்குமேயாகில், எனக்கறியப்புகலுமென-அடியேனுக்குந் தெரிந்துக்கொள்ளும்படியனுக்கிரகஞ் செய்தருளவேண்டுமென் றருச்சுனன்கேட்க-;(எ-று)
அங்கம்- உயிர்-பிராணன் - இந்தியம்-ஆகிய இவைகளில் எண்ணும்மைகள் தொக்கன

மெய்யுயிரிந்தியங்களல்லால்வேறறியேனென்றவனு - ம்
பையவவைவயாலறியப்படானுநீயென்றவரோ (௭)

நீயுநானும்புவிமேனிருபர்களுமெய்யுணர் வா
லாயுங்காற்பிறந்திறப்பதார்க்குமில்லையென்றவரோ (௬)

இ-ள்.

நீயும் - அருச்சுனனாகிய நீயும், நானும் - பகவானாகியயானு ம், புவிமேனிருபர்களும்-பூமியின் கண்ணுள்ள அரசர்களு மாகிய, ஆர்க்கும்-எவர்களுக்கும், மெய்யுணர்வால்-உண் மை ஞானத்தால், ஆயுங்கால்-விசாரிக்குமிடத்து, பிறந் திறப்பது - ஜனித்துமரிப்பது, இல்லையென்றவரோ-இல்லை யென்று கூறியருளியவரோநீர்,(எ-று).

உம்மை நான்கில் ஈற்றிலுள்ளது முற்றும்மை ஏனையவெண் ணும்மையாம்.

ஈங்கெவர்க்கும்பிறந்திறப்பதில்லையென்றீரிவ்வுல கி
னீங்குபவம்யார்க்கிதனைநிச்சயமாய்ச்சொல்லுமென (௭)

இ.ள்.

ஈங்கு-இவ்விடத்தில்; எவர்க்கும்-சருவத்திரர்களுக்கும்; பி றந்திறப்பதில்லையென்றீர்-ஜனித்துமரிப்பதின்றென்று கூறி னீர்; இவ்வுலகில் - இவ்வுலகத்தின் கண்ணே; நீங்குபவ ம்-மரித்தல் ஜனித்தலானவை; யார்க்கு-எவர்களுக்குள்ள ன; இதனை-இவ்வுண்மையை; நிச்சயமாய்ச்சொல்லுமென உறுதியாகச்சொல்லுமென்றருச்சுனன்கேட்க; (எ-று)

ஈங்கு-சுட்டுநீண்டுவந்தது செய்யுளாதலின்,நீங்குதல்; என் னுந்தொழிற்பெயர்இங்கே-நீங்கு-எனமுதனிலை மாத்திரை யாய்நின்றது.

இத்தரையிற்பிறந்திறப்பதெடுத்தவுடற்கடுத்த பொறி
தித்தியமாகியவான்மாவின்சொரூபமென்றவரோ (௮)

இ-ள்.

இத்தரையில்-இப்பூமியின்கண்; பிறந்திறப்பது ஜனித்துமரிப்பது; எடுத்தவுடற்கு-கருமத்துக்கேதுவாக வெடுத்து

ள்ள சரீரத்துக்கு; அடுத்தபொறி — பொருந்தியவிந்தியாம் *நித்தியமாகிய-(ஜனித்தன் மரித்தலின்றி நித்தியமாயுள்ள; ஆன்மா—ஆன்மாவே, நின்சொருப மென்றவரோ - உனது சொரூபமென்று கூறியருளியவரோநீர்-(எ—று)
ஆன்மா என்பதில் பிரிநிலை ஏகாரம் விகாரத்தாற்றொக்கது.

*பிராகபாவம் பிரத்தொம் சாபாவம் அன்னியோன்னியாபாவம்-அத்தியந்தாபாவமென்னு நான் கபாவமுமின்றிச்சதோதயமாயிருப்பதெதுவோ அதுநித்தியம் நித்தியமாயுள்ள ஆன்மாவேதானெனும்விசாரமறியவிரும்பில் எமதுகருணைக்கடலென்னும் பிரமானந்த சாகரசொரூபராகிய கோவிலூர்ச்சிதம்பரசுவாமிகள்செய்தருளிய இலக்கணைவிருத்தியிற்காண்க-

---

அங்கமுயிரிந்தியநானன்றிவேறெனைக்காணே
னிங்கியான்வேறுண்டேலெனக்கறியப்புகலுமென (கூ)

இ-ள்.

அங்கம்-சரீரமும்; உயிர்-பிராணனும்; இந்தியம்-இந்திரியங்களும் ; நானன்றி-யானென்றறிந்துளனேயல்லாமல்;வேறு-இவைகளுக்கன்னியமாக; எனைக்காணேன்-எனதுசொரூபத்தைதக்கண்டிலேன்; இங்கு-இச்சரீரங்களிலிடமாக ; யான்வேறுண்டேல் - எனதுசொரூபமிவைகட்கன்னியமாகவிருக்குமேயாகில், எனக்கறியப்புகலுமென-அடியேனுக்குந் தெரிந்துக்கொள்ளும்படியனுக்கிரகஞ் செய்தருளவேண்டுமென் றருச்சுனன்கேட்க—;(எ—று)
அங்கம்- உயிர்—பிராணன் - இந்தியம்—ஆகிய இவைகளில் எண்ணும்மைகள் தொக்கன

மெய்யுயிரிந்தியங்களல்லால்வேறறியேனென்றவனும்
மையவவையாலறியப்படானுநீயென்றவரோ (ம)

ள்ள சரீரத்துக்கு; அடுத்தபொறி — பொருந்தியவிந்தியாம்
*நித்தியமாகிய-(ஜனித்தன் மரித்தலின்றி)நித்தியமாயுள்ள;
ஆன்மா—ஆன்மாவே, நின்சொருப மென்றவரோ - உனது
சொரூபமென்று கூறியருளியவரோநீர்-(எ-று)
ஆன்மா என்பதில் பிரிநிலை ஏகாரம் விகாரத்தாற்றொக்
கது.

*பிராகபாவம் பிரத்தொம்சாபாவம் அன்னியோன்னியாபா
வம்-அத்தியந்தாபாவமென்னு நான் கபாவமுமின்றிச்சதோதயமா
யிருப்பதெதுவோ அதுநித்தியம் நித்தியமாயுள்ள ஆன்மாவேதா
னெனும்விசாரமறியவிரும்பில் எமதுகருணைக்கடலென்னும் பிரமா
னந்த சாகரசொரூபராகிய கோவிலூர்ச்சிதம்பரசுவாமிகள்செய்த
ருளிய இலக்கணைவிருத்தியிற்காண்க-

அங்கமுயிரிந்தியநானன்றிவேறெனைக்கா ணே
னிங்கியான்வேறுண்டேலெனக்கறியப்புகலுமென (௬)

இ-ள்.

அங்கம்-சரீரமும்; உயிர்-பிராணனும்; இந்தியம்-இந்திரிய
ங்களும்; நானன்றி-யானென்றறிந்துளனேயல்லாமல்;வே
று-இவைகளுக்கன்னியமாக; எனைக்காணேன்-எனது சொ
ரூபத்தைக்கண்டிலேன்; இங்கு-இச்சரீரங்களினிடமாக;
யான் வேறுண்டேல் - எனதுசொரூபமிவைகட்கன்னியமா
கவிருக்குமேயாகில், எனக்கறியப்புகலுமென-அடியேனுக்
குந் தெரிந்துக்கொள்ளும்படியனுக்கிரகஞ் செய்தருளவே
ண்டுமென் றருச்சுனன்கேட்க-;(எ-று)
அங்கம்- உயிர்-பிராணன் - இந்தியம்-ஆகிய இவைகளில்
எண்ணும்மைகள் தொக்கன

மெய்யுயிரிந்தியங்களல்லால்வேறறியேனென்றவனு ம்
மையவலையாலறியப்படானுநீயென்றவரோ (௭)

இ-ள்.

* பைய-இரகசியமாக; மெய்-சரீரமும்; உயிர்-பிராணனும் இந்தியங்களல்லால்-இந்திரியங்களுமாகிய (விவைகளேயே நானென்றறிந்திருக்கிறனே)யல்லாமல்; வேறு-இவைகட்கன்னியமாக; அறியேனென்றவனும்-(எனதுசொரூபத்தை) க்கண்டிலேனென்(றவைகளேவிஷயமா யறிந்தவறிவாயிருந்து) கூறியவனும்; † அவையால்-முற்சொல்லிய சரீரங்களால்; அறியப்படானும்-அறிதற்கு விடயமாகாதிருப்பவனும் (ஆகியபிரத்தியகாத்மசொரூபமே); நீயென்றவரோ-உனது சொரூபமென்றனுக்கிரகஞ் செய்தருளியவரோநீர், (எ-று).

*ஞானத்துக்கதிகாரமின்றிய துரியோதனாதியர் பலருநிறைந்துள்ளயுத்தகளமத்தியிற் சரீரத்தின்வாய விலக்ஷணமாயுமவைகட்கேகோசரமாயுமிராநின்றபிரத்தியகாத்மசொரூபமேயுனது சொரூபமென்றுபதேசிக்குமகாவாக்கியமானது அருச்சுனன் செவிக்குமாத்திரமன்றி மற்றயர்செவிக்குப்புலப்படாதிருத்தற்குப் பகவானிரகசியமாக வுபதேசித்தானென்பது தோன்றப்பையவென்றார்.

† அவையாலறியப்படான், எனப்பகவான் கூறியிருப்பதுபோலவேபிரமகீதை-உ-வது கேனோபநிடதார்த்தமுரைத்தஅத்தியாயத்தில்-"வாக்குமனங்கண் செவியான், மன்னிநின்றபிராணனினு-னீக்கிபுள்கரணத்தானின் மலன்கோசரிக்கவுறான்," எனக் கூறியிருப்பதுகாண்க.

தேகம்வேறாகிலதைச்சேர்ந்ததிவனேதென வே
சோகமேவிளைகருமத்தொடர்ச்சியினாலென்றவரோ (௰க)

இ-ள்.

தேகம்வேறாகில்-சரீரமான்மாவுக்கன்னியமானால்: அதை-அச்சரீரத்தினை ; இவன்-இவ்வான்மாவானவன்;சேர்ந்தது பொருந்தியது;ஏதெனவே-ஏதனாலென்றருச்சுனன்கேட்க,

*சோகமேவிளை-துக்கத்தையேவிளைவிக்கும்படியான; கருமத்தொடர்ச்சியினாலென்றவரோ- †கரும சம்பந்தத்தாலென்று கூறியருளியவரோ நீர், (எ-று).

சோகம் என்றதில் சாரியையும் இரண்டனுருபும்,-விளை என்றதில் விவ்விகுதியும்-தொக்கன

*கர்த்தாவாயிருந்து செய்யப்பட்டவிதி நிடேதமாகிய வுபயகன்மங்களுஞ் சனனமரண சம்சார துக்கங்களை விளைவித்தற்கே காரணமன்றிச்சம்சாரநிவிர்த்தியாகிய சுகத்தைவிளைவித்தற்குக்காரணமாகாதென்பது தோன்றத்தேற்றே காரங்கொடுத்துச்சோகமேவிளைகருமமென்றார்.

† வேதாகமங்களாற் புருடர்கட்குப் பிரவருத்தி நிமித்தம் அல்லதுநிவிர்த்தி நிமித்தம் யாதொன்று போதிக்கப்படுகிறதோ-அதுகன்மமாம்-அங்ஙனம் வேதாகமங்களாற் போதிக்கப்படாத இராகத்துவேஷரகிதகடனுகமன சௌசமுதலியஉதாசீனக்கிரியைகள்கன்மமன்றாம்-கன்மமும் - பிரவருத்தி நிமித்தம் போதிக்கப்படுகிறது விகிதகன்மமெனவும் நிவிர்த்தி நிமித்தம் போதிக்கப்படுகிறதுநிஷித்தகன்மமெனவும் இருவகைப்படும். இவைகளில்விகிதகன்மம்-நித்தியநைமித்திக-காமிய-பிராயச்சித்தமென நான்குவிதமாம், இவைகளினிலக்கணங்களை விசாரசாகரமிரண்டாவது தரங்கத்திற்காண்க

தேகமெடாமுன்கருமச்செயல்வருமாறேதென வே
யேகமாமரமும்வித்துமெனுமுறைபோலென்றவரோ (௰௨)

இ-ள்.

தேகமெடாமுன்-சரீரமெடுத்தற்குமுன்பு; கருமச்செயல்-கருமங்களைச்செய்யும்படியானசெயல்கள்; வருமாறு - வருகின்றவிதம்; ஏதெனவே-எங்ஙனமென்றருச் சுனன்கேட்க, *ஏகமாம்-ஒன்றாகிய, மரமும்- (வித்துக்கு) விருக்ஷமும், வித்தும்- (விருக்ஷத்துக்கு) விதையும், எனு முறைபோல்; (காரணமா)மென்னும் பீஜாங்குர நியாயம்போல (அஞ்ஞா

யேகருமத்துக்குச் சரீரமும் சரீரத்துக்குக் கருமமும் காரணமானமையின் கருமச்செயல்வரக்கூடும்) ;என்றவரோ-என்று கூறியருளியவரோநீர்,(எ று).

தாஷ்டாந்தம்-எஞ்சி நின்றதால்வருவித்தாம்

*மரமென்றுளதோ அன்றேவித்துங் காரணாத்மகமாக மரத்திலும் வித்தென்றுளதோ அன்றேமரமுங் காரணாத்மகமாக வித்திலும், அடங்கியொன்றாயிருத்தலின்-ஏகமாமரமும் வித்துமென்றார்.

காயமுந்தானும்பிறிதேற்கன்மமெவர்செய்ததெனத்
தீயவுடற்கலதுகன்மச்செயறனக்கேதென்றவரோ (௰௩)

இ-ள்.

காயமும்-சரீரமும், தானும்-ஆன்மாவும், பிறிதேல்-வேறுகுமானல், கன்மம்-விதிநிடேதமாகிய கன்மங்களை, எவர் செய்ததென-யாவர்செய்ததென்றருச்சுனன் கேட்க, கன்மச்செயல்-கன்மத்தைச்செய்யுஞ்செயலானது, *தீயவுடற்கலது-கொடிதாகியசரீரத்துக்கேயல்லாமல், தனக்கேதென்றவரோ-ஆத்மாவுக்கில்லையென்றுகூறியருளியவரோநீர், (எ-று).

*சரீரத்துக்குச் சந்தனாதித்தயில முதலிய வஸ்ணேதக சிநேதங்களால் ஸ்நானஞ்செய்வித்தல் திருமண், விபூதி, சந்தனாதிகள் சாற்றல் வஸ்திர பூடணாதிகளாலலங்கரித்தல் பால், தயிர் நெய்யாதிகள்சேர்ந்தசுவையாகிய வுணவுகளைக் காலந்தவறாதுண்பித்தலாகிய விவைகளோடின்னும் வேண்டியபடியுபசரித்து வரினும அதற்குப் பதிலாயற்பமேனுஞ் சுகங்கடருதற்கேதுவாகாமற்றுக்கந்தருதற்கேயேதுவாயிருத்தலாற் சரீரங்கொடியதென்பது தோன்றத்தீயவுடலென்றார்.

படர்கருமமுடல்செய்யிற்பலமுறுவதார்க்கெனவே
யடர்பலமுமுடற்கேயாமறிவார்க்கேதென்றவரோ (௰௪

இ-ள்.

படர்கருமம்—(நித்திய, நைமித்திய, காமிய, பிராயச்சித்தமெனவிரிந்துள்ள)கருமங்களை, உடல்செய்யில்-சரீரஞ்செய்யுமானல், பலமுறுவது-கன்மபலம்வந்து பொருந்துவது, யார்கெனவே - எவர்க்கென்றருச் சுனன்கேட்க, அடர்பலமும்-கன்மத்தால் வந்துபொருந்திய புண்ணியபாவமாகியபலன்களும், உடற்கேயாம்-சரீரத்துக்கேயாகும், *அறிவார்க்கு - சாக்ஷிமாத்திரமாக அறிந்துகொண்டிரா நின்றவான்மாவுக்கு, ஏதென்றவரோ—இல்லையென்று கூறியருளியவரோநீர், (எ-று).

*கடசராதிகளைச் செய்வதினல் வருமிலாபங்கள் அவைகளைச்செய்யுங்குலாலனையடையுமே யல்லாமல் குலாலனையுங் குலாலனற் செய்யப்படுவதாகிய கடசராதிகளையும் விஞைதமாகப் பார்த்துக்கொண்டிரா நின்றவர்களை யடையாதனபோல கன்மங்களைச்செய்வதினல் வரும்பிரயோசனங்கள் கன்மங்களைச் செய்வதாகிய சரீரத்தையடையுமே யல்லாமற் சரீரத்தையும் சரீரத்தாற் செய்யப்படுவதாகிய கன்மங்களையும் சாக்ஷிமாத்திரமாக அறிந்துகொண்டிரா நின்ற ஆன்மாவையடையாவென்பது சுருதியுத்தியனுபவங்களுக்கொத்த துணிபாதலால் அறிவார்க்கு ஏதென்ருர்.

வெய்யவினையுடற்கென்றன்மெய்யிங்கேவிழவான் மா
வையமறநரகசொற்கமனுவிப்பதேதெனவே (௰௫)

இ-ள்.

(1) வெய்யவினை-கொடிதாகிய கன்மபலமானது, உடற்கென்ருல்-சரீரத்துக்கென்று சொல்லுவீரானல், மெய்-சரீரமானது, இங்கே-இப்பூமியின்கண்ணே, விழ-மரணமாகிவீழ்ந்தபின்னர், ஆன்மா-(சேடித்திராநின்ற) ஆன்மாவானது, ஐயமற-சந்தேகமின்றி, நரகசொற்கமனுவிப்பது-நரக

சொற்கங்களை யனுபவிப்பதெனச்சில ர்கூறுவது, ஏதென வே-ஏதனுலென்றருச்சுனன்கேட்க,(எ-று) (1) வினை-எனக் காரியத்தைக் காரணமாகவுபசரித்தார்.

அனுபவமேயிலையதுவீஞரோபிதநிகழ்த்தி ற்
றனுகரணச்செயறனதாய்ச்சார்வதுபோலென்றவ ரோ
(௰௬)

இ-ள்.

அனுபவமேயிலை-ஆன்மாவுக்கு நரகசொற்கானுபவமேயில்லை, அது-ஆன்மாவுக்கு நரக சொற்கானுபவமுண்டென்பதை, நிகழ்த்தில்-சொல்லப்புகின், தனுகரணச்செயல்-தேகேந்திரியாதிகளின்செயலானது,தனதாய்-தனதுசெயலாக, சார்வதுபோல்-பொருந்துவதுபோல, வீஞரோபிதம்-வியர்த்தமாகிய (1) அத்தியாசமேயாகும், என்றவரோ-என்றுகூறியருளியவரோ நீர்,(எ-று)

(1) தனதபாவாதி கரணத்திற்றன தவபாசம் அத்தியாசமாம்-அல்லது அதிட்டானசத்தையினும் விஷமசத்தையுடைய தினவபாசம் அத்தியாசமாம்-அல்லதுபிராந்திஞானத்திற்கு விஷயமாயுள்ள மித்தையாவஸ்து மற்றும் பிராந்தி ஞானமிவையின் பெயர் அத்தியாசமாம்-இவ்வத்தியாசங்களின் பேதங்களை அறியவிரும்பில் ஞானவித்தியாசக்ர சொரூபராகிய கோவிலூர்ப்பொன்னம்பலசுவாமிகள் கைவல்லிய நவநீதத்திற்கியற்றிய தத்துவார்த்ததீபமென்னு முறைப்பிரசங்கத்திற்காண்க. அதிகரணம்-இடம்-அவபாசம்-தோற்றரவு-விஷமசத்தை-சமமல்லாத சத்தை

மற்றுடலின்செய்கைதன்மேல்வருமயக்கமேதென வே
முற்றுணர்வொன்றில்லாதமோகமென்றுசொன்னவ ரோ
(௰௭)

இ-ள்.

மற்றுடலின்-(ஆன்மாவுக்)கன்னியமாயுள்ள சரீரத்தினது செய்கை-பருத்திளைத்தல் முதலிய செயல்கள், தன்மேல் ஆத்மாவாகிய தன்பேரில், வருமயக்கமேதெனவே-நான் பருத்தேனிளைத்தே னெனவாராநின்ற அத்தியாசத்திற்கு(க் காரணம்) யாதென்றருச்சுனன்கேட்க, முற்றுணர்வு-பூரணஞானமானது, ஒன்று-பொருந்துதல், இல்லாத-இன்றிய, மோகமென்று-அஞ்ஞானமே (காரண) மென்று, சொன்னவரோ-கூறியருளியவரோநீர்-, (எ-று) இங்கே ஒன்று என்பது முதனிலைத்தொழிற்பெயர்.

அறிவுதேகந்தனக்கோவான்மாவிற்கோவென வே
பிறிவுசெயிலசித்துடலம்பிரமமறிவென்றவரோ (௰அ)

இ-ள்.

அறிவுதேகந்தனக்கோ-சித்திலக்கணம் சரீரத்துக்கோ-ஆன்மாவிற்கோ-ஆன்மாவினுக்கோ, எனவே-என்றருச்சுனன்கேட்க, பிறிவுசெயில்-(சரீரவிலக்கணத்தையும் ஆன்மவிலக்கணத்தையும் வேறு) பிறித்து ப்பார்க்குமிடத்து, அசித்துடலம்-சரீரஞ்சடவிலக்கணத்தையுடையது, பிரமமறிவென்றவரோ - பிரமமே சித்தி லக்கணத்தை யுடையதென்று கூறியருளியவரோ நீர், (எ-று).

தேகமசித்தாகிலிந்தச்செயல்வருவதேதென வே
யேகபரஞ்சோதியின்முன்னிருக்கையினாலென்றவ ரோ
(௰௯)

இ-ள்.

தேகமசித்தாகில்-சரீரஞ்சடமாயின், இந்தச்செயல்வருவது (சரீரத்துக்குக் கன்மங்களைச்செய்வதான) இச்செயல்வரா நின்றது, ஏதெனவே-யாதினாலென்றருச்சுனன்கேட்க, ஏக

பரம்-ஒன்றாகவும் உயர்வாகவுமுள்ள, சோதியின்முன்-சைதன்னியத்தின் சன்னிதானம்பற்றி, இருக்கையினாலென்றவரோ-இருக்கின்றமையால் (தேகத்திற்குக்கன்மச் செயல்வரக்கூடு) மென்று கூறியருளியவரோநீர்—(எறு)

இருக்கினுமசேதனத்துக்கிச்செயலுண்டோவென வே
யுருக்குபடாக்காந்தமுன்னிலூசிகிகளென்றவரோ (உய)

இ-ள்.

இருக்கினும்-(சைதன்னியத்தின் சன்னிதானம்பற்றி)யிருந்தாலும், அசேதனத்துக்கு-சடமாயுள்ள (சரீரத்துக்கு), இச்செயலுண்டோ-இக்கன்மாதிகளைச் செய்யத்தக்க செயலுண்டாகுமோ, எனவே-என்றருச்சுனன்கேட்க, உருக்குபடா-அக்கினியினாலுருக்கப்படாத, காந்தமுன்னில்-காந்தசன்னிதானத்திலுள்ள, ஊசிகிகள்-ஊசிக்குக்கம்பிக்குஞ்செயலுண்டாதல்போல, என்றவரோ-ஆன்மசன்னிதானத்திராநின்ற சரீரத்திற்குக் கன்மச்செயல் வரக்கூடுமென்று கூறியருளியவரோநீர்-(எறு.)

தாஷ்டாந்தம்-எஞ்சிநின்றதால் வருவித்தாம்

சொன்னசெய்லுடற்கானாற்சுகதுக்கம்யார்க்கென வே
அன்னசுகதுக்கமுந்தானவ்வுடற்கேயென்றவரோ (உக)

இ-ள்.

சொன்னசெயல்-(தேவரீர்) கூறியகன்மச்செயலான்து, உடற்கானால்-சரீரத்துக்கென்று சொல்லுவீராகில், சுகதுக்கம்-(கன்மபலமாகிய) சுகதுக்கங்கள், யார்க்கெனவே-எவர்களுக்கென்றருச்சுனன்கேட்க, அன்னசுகதுக்கமும்-அத்தன்மையாகிய சுகதுக்கங்களும், அவ்வுடற்கேயென்றவரோ-முற்கூறியசரீரத்துக்கேயென்று கூறியருளியவரோநீர்-(எறு) *தான்-அசை

சேதனமாமான்மாவைச்சேராததுக்கசு க
மோதுசடமாமுடலையுற்றிடுமோசொல்லுமென (௨௨)

இ-ள்.

சேதனமாமான்மாவை-சித்துருவமாகிய வான்மாவை, சேராததுக்கசுகம்-பொருந்தாத சுகதுக்கங்களானவை, ஓது (இழிவுடையதாகக்) கூறப்பட்ட, சடமாமுடலை-அசேதனமாயுள்ள சரீரத்தை, * உற்றிடுமோ - பொருந்துமோ, சொல்லுமென-(தேவரீர்) கூறியருள வேண்டுமென்றருச்சுனன்கேட்க,(எ-று).

* ஒருவன்வாளினால் மற்றொருவனைக்கொலை செய்யில் அக்கொலையினாலுண்டாகிய தண்டனையானது சேதனனாயுள்ள புருடனைச்சாருமேயன்றி சேதனமாயுள்ள வாளினைச்சாராததுபோல ஆன்மாசரீரத்தாற் கன்மங்களைச் செய்யின் கன்மபலமாகிய சுக துக்கங்கள் சேதனமாயுள்ள ஆன்மாவைப்பொருந்துமேயன்றி சேதனமாயுள்ள சரீரத்தைப்பொருந்ாதெனும் தனதபிப்பிராயந்தோன்ற அருச்சுனன் சடமா முடலையுற்றிடுமோவென்றான்.

பூதமைந்தோடைந்துயிர்கள்புலன்கள்பத்துமன முதனான்
கீதிருமெய்யிதின்மனத்துக்கின்பதுன்பமென்றவரோ (௨௩)

இ.ள்.

(1) பூதமைந்தோடு-(பஞ்சபூதகாரியமாகிய) தூலசரீரத்தோடு, ஐந்துயிர்கள்-பஞ்சவாயுக்கள், புலன்கள்பத்து-தசேந்திரியங்கள், மனமுதனான்கு-மனமுதலிய அந்தக்கரணசதுட்டயம், ஈது-ஆகியவிவைகள், இருமெய்-இரண்டு சரீரங்களாகும், இதில்-இவ்விரண்டு சரீரங்களாகப் பொருந்தியதத்துவங்களில், மனதுக்கு-(தீபச்சுவாலையின் பரம்பரைபோல விருத்திருபபரிணாமத்தை யடையாகின்ற ஓர்.

தத்துவமாகிய). மனதுக்கு, இன்பதுன்ப மென்றவரோ-சுகதுக்கங்களென்று கூறியருளியவரோ நீர், (எ-று).
பூதமைந்தோடைந்துயிர்கள், புலன்கள்பத்து-மனமுதனான்கு-ஈது-என்றதும்-இருமெய்-இதில்-என்றதும் - பன்மையிலொருமை மயங்கியவழுவமைதி-(1) காரியகாரணங்களையொற்றுமைப் படுத்தித் தூலசரீரத்தைப் பூதமைந்தென்றார்.

இந்தவிருவகைத்தனுவிற்கேதுவேதெனவினவ
முந்தியகாரணமதனான்மூன்றுதனுவென்றவரோ (உ௪)

இ-ள்.

இந்தவிருவகைத்தனுவிற்கு-இப்போதுசொல்லிய இரண்டுவகுப்பாகிய சரீரங்கட்கு, ஏதுவேதெனவினவ-மூலம்யாதென்றருச்சுனன்கேட்க, முந்திய-இவ்விரண்டிற்கு முதன்மையாயுள்ள, காரணம்-காரணமானது (அஞ்ஞானமாம்), அதனால்-இவ்விரண்டிற்கு மூலமாகிய யஞ்ஞானமொன்றிருந்தலால், மூன்றுதனுவென்றவரோ - சரீரங்கள் மூன்றென்று கூறியருளியவரோநீர்-(எ-று).

மனமறியுந்துக்கசுகவரவென்றீரம்மனமும்
வினவிலசேதனமலவோவிரித்தெனக்குவிளம்புமென (உ௫)

இ-ள்.

துக்கசுகவரவு—சுகதுக்கங்களின் வரவை, மனமறியுமென்றீர்-மனமனுபவிக்குமென்று தேவரீர்கூறினீர், அம்மனமும்-அந்தமனமும், வினவில்-விசாரிக்குமிடத்து, *அசேதனமலவோ-ஏனையதத்துவங்களைப் போற்சடமல்லவோ, விரித்து -(அம்மனம் சுகதுக்கங்களை அனுபவித்தற்கானஏதுவை) விஸ்தாரமாக, எனக்கு விளம்புமென-அடியேனுக்குக்கூறவேண்டுமென்றருச்சுனன் கேட்க, (எ-று)

அம்மனத்திலான்மாவபேதம்போற்றோன்றுதலா ல்
விம்முதுக்கசுகத்தைமனமேவுமென்றுசொன்னவ ரோ
(உசு)

இ-ள்.

அம்மனத்தில் - அந்தமனதில், ஆன்மா - ஆத்மாவானது, *அபேதம்போல் - ஒன்றுபோல், தோன்றுதலால்-பிரதிபலித்துத்தோன்றுகின்றமையால், விம்முதுக்கசுகத்தை -மிகுதியாயுள்ள துக்கசுகங்களை, மனமேவுமென்று-மனது பொருந்துமென்று, சொன்னவரோ-கூறியருளியவரோநீர்- (எ-று).

*ஆன்மாவுக்கும் மனதுக்கும் ஞானஞ்ஞானகாலமாகிய வெந்தக்காலத்திலும் ஏகத்துவமின்றென்பது தோன்ற அபேதமாய்த்தோன்றுதலென்னுது அபேதம் போற்றோன்றுதலென்றார்.

அந்தமனோதுக்கசுகமதனிடத்துநில்லாம ல்
வந்திலங்குமான்மாவைமருவியதென்சொல்லுமென (உஎ)

இ-ள்.

அந்தமனோதுக்கசுகம் - அம்மனதுக்குரிய சுகதுக்கங்கள், அதனிடத்து - அம்மனதினிடமாகவே, நில்லாமல்-நிற்காமல், இலங்குமான்மாவை-(அறிவுமயமாய்) விளங்கிக்கொண்டிராநின்ற ஆத்மாவை, வந்துமருவியதென்-வந்துபொருந்தியதெதுபோல, சொல்லுமென-தேவரீர் கூறவேண்டுமென்றருச்சுனன் கேட்க, (எ-று).

வெய்யகனலின்சூடுமேல்வைத்தசட்டியி னா
டய்யபுனலூடுவந்தங்கொன்றுதல்போலென்றவரோ (உஅ)

இ-ள்.

வெய்யகனலின்சூடு - கொடிதாகிய அக்கினியினுஷ்ணமானது, மேல்வைத்த-மேலேவைத்திருக்கப்பட்ட, சட்டியினூடு-சட்டியினுள், *உய்-அ-புனலூடு - விட்டிராநின்ற அந்தச்சலத்தின்கண், வந்தங்கு-வந்தவ்விடத்து, ஒன்றுதல்போல் - பொருந்துதலைப்போல, (மனதின் சுகதுக்கங்கள் மனோசம்பந்தமான ஆன்மாவைப்பொருந்தியது,) என்றவரோ-என்றுகூறியருளியவரோ நீர், (எ-று).

எஞ்சிய-தாஷடாந்தங்களை விரித்தாம்.

உய் - என்பது - தன்வினைபிறவினைகளுக்குப் பொதுவாயினும் ஈண்டுபிறவினையை யுணர்த்திநின்றது.

சித்தாகுமான்மாவுஞ்செடமாகுஞ்சித்தமுந் தா
னொத்தாங்கிரண்டுமொன்றாயுற்றவகைசாற்றுமென (உகூ)

இ-ள்.

சித்தாகுமான்மாவும்-சேதனமாயுள்ள ஆன்மாவும், செடமாகுஞ்சித்தமும்அசேதனமாயுள்ளமனதும், ஒத்தாங்கு-அபேதம்போல, இரண்டும்-உபயமும், ஒன்றாய்-ஏகமாய், உற்றவகை-பொருந்தியவிதம், சாற்றுமென-(எங்ஙனம்)சொல்லுமென்றருச்சுனன்கேட்க, (எ-று) தான் அசை

வல்லிரும்புகனலூடனேமருவியதுபோன்மன மு
மொலலையிலான்மாவுடனேயுற்றதுகாணென்றவரோ(ஙய)

இ-ள்.

வல்-வலுமைபொருந்திய, இரும்பு-(தூலமாகவும் அப்பிரகாசமாகவுமிராநின்ற) அயமானது, கனலூடனே-(சூட்சுமமாகவும் பிரகாசமாகவுமுள்ள) அக்கினியுடனே, மருவியதுபோல-(ஏகமாக)ப்பொருந்தியதுபோல, மனமும்-(தூல

மாகவும் அப்பிரகாசமாகவுமிராநின்ற) மனதும், ஆன்மாவுடனே- (சூட்சுமமாகவும்பிரகாசமாகவுமுள்ள) ஆத்மாவுடனே, ஒல்லையில்-அநாதியில், உற்றது-(ஒன்றுபோற்)பொருந்தியது, காணென்றவரோ-நீயறிவாயாகவென்று கூறியருளியவரோ நீர், (எ-று).

உற்றதேதனாலெனவேயுள்ளமவிவேகமுறப்
பற்றியதன்மேலுமதன்பண்புவந்ததென்றவரோ (கூக)

இ-ள்.

உற்றது-(மனதுக்குரிய சுகதுக்க மாத்மாவைவந்து) பொருந்தியது, எதனாலெனவே - யாதினாலென்றருச்சுனன் கேட்க, உள்ளம்-மனமானது, அவிவேகமுற-விவேகசூனியத்தையடைந்தமையால், பற்றிய - அம்மனத்தினைப் பொருந்திய, தன்மேலும்-(ஆத்மாவாகிய) தன்பேரிலும், அதன் பண்புவந்ததென்றவரோ அம்மனதுக்குரிய சுகதுக்கங்கள் வந்து பொருந்தியதென்று கூறியருளியவரோ நீர், (எ-று).

அடுத்தகுணம்போமோபின்னான்மாவைவிட்டெனவே
யெடுத்தசெம்பூநிறம்படிகத்தேறுதல்போலென்றவரோ (கூஉ)

இ-ள்.

அடுத்தகுணம் - அநாதியாகவே பொருந்தியிராநின்ற சுகதுக்கங்களாகிய குணங்கள், பின் - பின்பொருகாலத்தில், ஆன்மாவைவிட்டு - ஆன்மாவைப்பிரிந்து, போமோ-நீங்குமோ, எனவே-என்றருச்சுனன்கேட்க, எடுத்த-பற்றியுள்ள, செம்பூநிறம்-சிவந்தபுட்பத்தினிறமானது, படிகத்தேறுதல் போல்-பளிங்குக் கண்ணாடியிற் (றோற்றமாத்திரமாக) வேறித்தோன்றுதல்போல, (ஆத்மாவினிடத்திலும் மனதின் குணங்கள் அத்தியாசத்தாற் றோன்றுகின்றமையின் அவை

யெதார்த்தமல்ல) என்றவரோ-என்று கூறியருளியவரோ நீர், (எ-று).

விசேடம் எடுத்த-என்பதற்கு-இங்கே-பற்றிய-தாங்கிய-தரித்த-எனுமூன்றும்-பொருந்தும்-தாஷ்டாந்தமெஞ்சி நின்றதால் வரிவித்தாம்-

(1) அடுத்தகுணமான் மாவைவிட்டு நீங்குமோவென்னுங் கடாவிற்கு புட்பத்தின் செந்நிறமானது படிகத்திற்றோன்றினும் எதார்த்தத்தி லில்லாததுபோல மனதின் குணங்களாத்மாவினிடத்துத் தோன்றினும் எதார்த்தத்திலில்லாதிருக்க அவைகளாத்மாவினிடத் திருப்பதாகக்கொண்டு) நீங்குமென்றேனும் அல்லது நீங்காவென்றேனும் விடை கூறலசங்கதமாகுமாதலின் அக்குணங்களாத்மாவினிடத் தத்தியாசத்தாற் றோன்றுகிறதென்னும் பொருடோன்றச் செம்பூநிறம்படிகத்தேறுதல் போலென்றார்-

---

சுத்தபடிகம்போற்சொரூபமாய்த்தானிருக் ... ... க
மெத்தவுமாசாமலினமேவியதென்சொல்லுமென (௩௩)

இ-ள்.

சுத்தபடிகம்போல்-பரிசுத்தமாகியபளிங்கினைப்போல, சொரூபமாய்த்தானிருக்க-சச்சிதானந்த சொரூபமாகவே யாத்மாவிருக்க, மெத்தவும்-மிகவும், ஆசாமலினம் ஆசையாகிய களங்கம், மேவியதென்-(ஆத்மாவினிடத்திற்) பொருந்தியதெதனாலே, சொல்லுமென (அதனைத்தேவரீர்) கூறியருளவேண்டுமென்றருச்சுனன்கேட்க, (எ-று).

அஞ்ஞியாம்வாசனையாலடைந்ததாசாமலின ... ம்
மஞ்ஞேபந்தமிருக்கின்முத்திவாராதென்றுணர்ந்தவரோ
(௩௪)

இ-ள்.

அஞ்ஞியாம்வாசனையால் - அஞ்ஞியாயுள்ள கரணவாசனையால், ஆசாமலினம்-ஆசாபாசமாகியகளங்கம், அடைந்தது-வந்துபொருந்தியதாம், மனோபந்தம்-(அதுவே)மனதுக்குப் பந்தமுமாகும், இருக்கில்-அப்பந்தமிருக்குமானால், முத்தி வாராதென்று-மோக்ஷஞ்சித்திக்கமாட்டாதென்று, உரைத்தவரோ-கூறியருளியவரோநீர்-(எ-று).

பந்தமெதுமுத்தியெதுபகுத்துரைக்கவேண்டுமென்ற ன்
சிந்தைதெளியவென்றுதிருத்தாளினைவணங்க (௩௫)

இ-ள்.

பந்தமெது-பந்தமென்பதுயாது, முத்தியெது-மோக்ஷமென்பதுயாது, என்றன்சிந்தை-எனதுசித்தமானது, தெளிய, $(சந்தேகவிபரீதங்களின்றித்) தெளிவையடையும் பொட்டு, பகுத்து-வேறுபிறித்து, உரைக்கவேண்டுமென்று-கூறியருளவேண்டுமென்று, திருத்தாளினை-சிறப்புப்பொருந்தியவுபயதிருவடிகளையும், வணங்க-அருச்சுனன்நமஸ்கரிக்க-(எ-று).

$ நாமமுதலியவற்றாற் பிறித்தறியாமற் பொருளுண்மை மாத்திரையாக நிருவிகற்பமாயறிந்த பொருளையிஃது யாதோவெனவொன்றிற்றுணிவு பெறாதாராய்தல் சந்தேகம்-அதனையதனோடொப்புமையுடைய வேறுபொருளாக மயங்கி நிச்சயித்தல் விபரீதம்-

---

தேகாதிதானெனவேசேரபிமானங்கள்பந் த
மாகாதமானம்விடிலரியமுத்தியென்றவரோ (௩௬)

இ-ள்.

தேகாதி-தேகேந்திரியாதிகளில், தானெனவே-தானென்ப தாக, சேரபிமானங்கள்-பொருந்தாநின்றஅபிமானங்களே, பந்தம்-பந்தமாகும், ஆகாத-சுருதிகட்கும் பெரியோர்கட்கு மங்கிகாரமில்லாத, மானம்விடில்-அபிமானத்தைவிட்டு விடில், அரிய-அதுவே யபக்குவர்களாலடைதற் கருமையாகிய, முத்தியென்றவரோ-மோக்ஷமென்று கூறியருளியவரோநீர், (எ-று).

அபிமானம்வரும்வகையுமாங்கதுதான்றீர்வகையுந்
தபியாமனறியத்தயவாகக்கூறுமென (நடஎ)

இ-ள்.

அபிமானம் வரும்வகையும்-அபிமானம்வந்து பொருந்துகின்றவிதமும், ஆங்கு-அதுபோல, அதுதான்றீர்வகையும்-அவ்வபிமானம் நீங்குகின்றவிதமும், தபியாமல்-தாபமுறாமல், நானறிய-அடியேனறியும்பொருட்டு, தயவாக-கிருபையாக, கூறுமென-அநுக்கிரகம்பண்ணவேண்டுமென் றருச்சுனன்கேட்க, (எ-று).

மறந்திடுமஞ்ஞானத்தான்மானம்வந்ததஞ்ஞா ன
மிறந்துவிடின்மானமும்போமென்னவுரைசெய்தவரோ (நடஅ)

இ-ள்.

மறந்திடும்-(ஆத்மாவாகியதன்னை) மறத்தற்கேதுவாகிய, அஞ்ஞானத்தால்-அஞ்ஞானத்தினல், மானம்வந்தது அபிமானம் வந்துபொருந்தியது, அஞ்ஞானமிறந்துவிடில்-

அவ்வஞ்ஞானம்-நாசமுறுமாயின், மானமும்போமென்ன-அவ்வபிமானமும் நீங்கிவிடுமென்று, உரைசெய்தவரோ-கூறியருளியவரோநீர், (எ-று).

அந்தமுறையஞ்ஞானமணுகுவதும்போவதுவு ஞ்
சந்தயமில்லாதறியத்தயவாகக்கூறுமென (கூகூ)

இ-ள்.

அந்தமுறை-முற்கூறியகிரமமாகவே, அஞ்ஞானமணுகுவதும்-அஞ்ஞானம்வருதற்கான ஏதுவையும், போவதுவும்-நீங்குதற்கானவேதுவையும், சந்தயமில்லாதறிய-ஐயமின்றியானறியும்பொருட்டு, தயவாக-கிருபையோடு, கூறுமென-சொல்லவேண்டுமென்றருச்சுனன்கேட்க-(எ-று). சந்தேகம் சந்தயமெனமரீயது-

---

அஞ்ஞானம்வந்ததனாதியதுசொல்வதல் ல
மெய்ஞ்ஞானத்தாலேவிடுமென்றுரைத்தவரோ (சய)

இ-ள்.

அஞ்ஞானம் வந்தது-அஞ்ஞானமொருகாரணத்தால் வந்ததெனச், சொல்வதல்ல-சொல்லத்தக்கதல்ல, அது-அவ்வஞ்ஞானமானது, அநாதி-அநாதியாயுள்ளதேயாகும்,*மெய்ஞ்ஞானத்தாலே-தத்துவஞானத்தால், விடுமென்றுரைத்தவரோ-நீங்கிவிடுமென்று கூறியருளியவரோநீர், (எ-று).

(1) கடத்தினது பிராகபாவமநாதியாயிருக்கினுங் குலாலதண்டக்கிரியையாலதற்கு நாசமுண்டாதல்போல அஞ்ஞானமநாதியாயிருக்கினு மதற்கு ஞானத்தால் நாசமுண்டாதல் சித்தமாதலால் மெய்ஞ்ஞானத்தாலே விடுமென்றார்.

இரவியெதிரடுத்துவந்தவிருட்போலவஞ்ஞான ம்
வரவிதியோசோதிதன்பால்வந்தவகையேதெனவே (சக)

இ-ள்.

இரவியெதிரடுத்துவந்த-சூரியன்முன்பாக மருங்கிவந்த, இருட்போல-அந்தகாரம்போல, சோதிதன்பால்-சுயம்பிரகாசமாகிய என்னிடத்து, அஞ்ஞானம்வரவிதியோ-அஞ்ஞானம்வருதற்கு நியாயமுள்ளதோ, வந்தவகை-(வருதற்கு நியாயமில்லாதிருந்தும் நானறியேனென்னு மனுபவந்தோன்ற) வந்திராநின்றவிதம், ஏதெனவே-எதனாலென்றருச்சுனன்கேட்க-(எ-று).

அந்தஅறிவுவந்தாலஞ்ஞானமில்லையப்பா ற்
சந்ததமுமானந்தசாகரநீயென்றவரோ (சஉ)

இ-ள்.

(1) அந்தஅறிவுவந்தால் - நான்சுயம் பிரகாசமென்னும் ஞானம் உனக்குதயமானால், அஞ்ஞானமில்லை-அஞ்ஞானம் உன்னிடத்தில்லாததாகும், அப்பால்-அதற்குப்பின், சந்ததமும்-சதாகாலமும், நீஆனந்தசாகரம் - நீபிரமானந்த சமுத்திரமாகவேயிருப்பாய், என்றவரோ-என்று கூறியருளியவரோநீர்-(எ-று).

(1) பிரகாசமாயுள்ள ஆத்மாவினிடத்தப் பிரகாசமாகிய வஞ்ஞானம் வந்திருப்பதெதனாலென்னுங்கடாவிற்கு அந்த அறிவுவந்தாலஞ்ஞானமில்லையென்றமையால்-நான்சுயம்பிரகாசமென்னும் †அதிஷ்டான ஞானமுதயமாதற்குப் பூர்வம் பிரகாசமாகிய சந்திரனிடத்தப் பிரகாசமாகிய களங்கமநாதியாகவேயிருத்தல்போல பிரகாசமாகிய ஆத்மாவினிடத்தப் பிரகாசமாகிய வஞ்ஞானமநாதியாகவேயுள்ளதன்றியிடையில் யாதானுமோர் காரணத்தால் வந்ததன்றென்பதேவிடையென வூகித்துணர்க.

† யாதொன்று நிருவிகாரமாகவும் அவித்தையாற் செய்யப்

பட்ட கற்பிதகாரியங்கட்காசிரயமாகவுமிருக்கிறதோ-அது அதிஷ்டானமாகும்-திருஷ்டாந்தம்-கற்பிதசற்பத்துக்கு-இரச்சு. அதிஷ்டானம்.

வேதாந்தத்தாற்குருவான்மெய்ஞ்ஞானம்வந்தவுடன்
றீதானதுக்கசுகந்தீராததேதெனவே (சரு)

இ-ள்.

வேதாந்தத்தால் - வேதாந்தசாஸ்திர சிரவணத்தினாலும், குருவால் - ஆசாரியருபதேசத்தினாலும், மெய்ஞ்ஞானம்-தத்துவஞானம், வந்தவுடன்-உதயமான உத்தரக்ஷணமே, தீதானதுக்கசுகம் - கொடிதாகியசுகதுக்கங்கள், தீராததேதெனவே-நீங்காததெதனாலென்றருச்சுனன்கேட்க, (எ-று).

பற்றறுமோதுக்கசுகம்பரோக்ஷஞானத்தா ... லே
யற்றமாமவ்விரண்டுமபரோக்ஷத்தென்றவரோ (சச)

இ-ள்.

பரோக்ஷஞானத்தாலே-பரோக்ஷஞானத்தால், துக்கசுகம்-சுகதுக்கங்களாகிய, பற்றறுமோ - பற்றுக் களைசமாமோ (ஆகாமற்றெதனாசமாமெனின்), அவ்விரண்டும்-அவ்விரண்டுபற்றுக்களும், அபரோக்ஷத்து அபரோக்ஷ ஞானத்*தால், அற்றமாம்-நாசமாகும், என்றவரோ-என்றுகூறியருளியவரோநீர், (எ-று).

*ஆல் என்னும் கருவிப்பொருளுணர்த்து மூன்றனுருபு விரிக்கப்பட்டது.

பரோக்ஷமபரோக்ஷமெதுபகுத்துரைக்கவேண்டுமென்றன்
றிரோதமாம்புத்திநன்ருய்த்தெளிவுபெறுமாறெனவே (௫௫)

இ-ள்.

பரோக்ஷமபரோக்ஷமெது - பரோக்ஷ ஞானமென்பதியாது அபரோக்ஷஞானமென்பதியாது, எந்தன்-எனது, திரோதமாம்புத்தி-மயக்கம்பொருந்தியபுத்தியானது, நன்ருய்-நன்ருக, தெளிவுபெறுமாறு - தெளிவையடையும் பொருட்டு பகுத்துரைக்க வேண்டும்-வேறுபிரித்துக் கூறவேண்டும், எனவே-என்றருச்சுனன்கேட்க, (எ-று.)

பகர்ந்தசந்தஞானம்பரோக்ஷமனுபவத் தா
லகம்பிரமமெனுஞானமபரோக்ஷமென்றவரோ (௫௬)

இ-ள்.

பகர்ந்த (அசத்காவரணவிரோதியெனச்) சொல்லிய, சந்த ஞானம்-சாஸ்திர ஜன்ய ஞானமானது, பரோக்ஷம்-பரோக்ஷஞானமாகும், அனுபவத்தால்-சுவானுபவத்தால், அகம்பிரமமெனு ஞானம்-நான் பிரமமென்னும் ஞானமானது, அபரோக்ஷமென்றவரோ-அபரோக்ஷஞானமென்று கூறியருளியவரோரீர், (எ-று)

தான்பிரமமென்றறிந்துந்தனுவைத்தானென்றபுத் தி
யேன்போகவில்லையதையெனக்கறியப்புகலுமென (௫௭)

இ-ள்.

தான்பிரமமென்றறிந்தும்-அகம்பிரமமென்றறிந்தும், தனுவை-தேகேந்திரியாதிகளை, தானென்றபுத்தி-அகமென்னும் புத்தியானது,ஏன்போகவில்லை-எதனுனீங்கவில்லை,அதை-

(நீங்காதிருத்தற்குள்ள) அக்காரணத்தை, எனக்கறிய-அடியேனுக்கறியும்பொருட்டு, புகலுமென-கூறியருளவேண்டுமென்றருச்சுனன்கேட்க, (எ-று).

கேள்வியினான்மனனத்தாற்கிளர்ந்தயோகங்களி ஞ
லாள்பிரமத்தனுபவம்வந்தது தீருமென்றவரோ (சஅ)

இ-ள்.

*கேள்வியினால் - சாஸ்திரசிரவணத்தினாலும், †மனனத்தால் - அர்த்தமனனத்தினாலும், ‡கிளர்ந்த $யோகங்களினால்-விளங்காநின்றதியானயோகங்களினாலும், ||ஆள்-முயற்சித் (தடையத்தக்க) பிரமத்தனுபவம்வந்து-பிரமானுபவமுதயமாகியபின், அது-அத்தேகோகமென்னும் புத்தியானது, தீருமென்றவரோ - நீங்குமென்றுகூறியருளியவரோநீர், (எ-று).

|| ஆள்-என்பது-முயற்ச்சி

* சற்சாஸ்திரார்த்தங்களைக் குரு முன்னிலையிற் சடுவிதலிங்கதாற் பரியமாகச்சிரவணஞ் செய்தலைக்கேள்வியென்றார்.

†சிரவணப்பொருளைத் தானேயினும் தனக்கொத்த சாதுசங்கங்களோடாயினுஞ் சுருதிதாற்பரியமாகத் தர்க்கயுத்தியனுமானங்களோடு சிந்தித்தலைமனனமென்றார்.

‡மனனத்தா னிச்சயித்த பொருளையதுவேநான் நானேயதுவெனத்தயிலதாரைபோல நிரந்தரம் நெடுங்காலம் நேயத்தோடுசொதிவிருத்திப்பிரவாக ரூபமாகத்தியானிக்கினதிதித்தியாசனத்தை யோகமென்றார்

‡ தியானபரிபாகமாகிய சமாதியில் தியானவஸ்துவாகிய பரமாத்மாதன் மயமாகவிளங்குதலின் கிளர்ந்தயோகமென்றார்

ஆதியாஞ்சிற்சொரூபமாகாததானினிமேல் ... ற்
சோதிமனுதியினற்சொரூபமாமோவெனவே (௬௬)

இ-ள்.

ஆதியாம்-முதன்மையாகிய, சிற்சொரூபம்-சின்மாத்திரசொரூபம், ஆகாததான்-(முன்னமே) ஆகாதிருக்கப்பட்டஆன்மா, இனிமேல்-பின்னர், சோதிமனுதியினல், விசாரிகின்ற-மனனமுதலியவைகளால், சொரூபமாமோ - (சின்மாத்திரசொரூபமாகுமோ, எனவே-எனறருச்சுனன் கேட்க, (எ-று).

எப்போதுஞ்சின்மயந்தானெனன்மறந்துதேடுவ து
செப்புமிடற்றணியிருக்கத்தேடுதல்போலென்றவ ரோ
(௬௭)

இ-ள்.

எப்போதும்-எந்தக்காலத்தும், சின்மயம்-சின்மாத்திரசொரூபம், தானெனல்-தானென்பதை, மறந்து-அயர்ச்சித்து, தேடுவது-(அடையவேண்டுமெனத்)தேடுகின்றது, செப்புமிடற்று-சொல்லாகின்றகண்டத்து, *அணியிருக்க - (கண்டாபரணமிருக்கும்போது, தேடுதல்போலென்றவரோ-(கண்டாபரணமெங்குற்றதோவென)த்தேடுகிறதற்குச் சமானமாகுமென்று கூறியருளியவரோநீர், (எ-று).

* அணியென்பது-இடுவன, தொடுவன, கட்டுவன, கவிப்பன, முதலிய ஆபரணங்கள் பலவற்றிற்கும் பொதுப்பெயர்

தேடியபின்றேகபுத்திதீர்ந்துபோய்ச்சிற்சொருப ங்
கூடுவனேயானென்குறைதீரச்சொல்லுமென (௩௧)

இ-ள்.

தேடியபின்-மனனாதிகளாற்றேடியபிற்பாடு, தேகபுத்திதீர்ந்துபோய்-தேகோகமென்னும் புத்தியானது கெட்டொழிந்து, சிற்சொருபம்-சின்மாத்திரசொரூபத்தை, (1) கூடுவனோயான் - யானடைவனோ, என்குறைதீர - எனது குறைவானது நீங்கும்படி, சொல்லுமென-கூறியருளவேண்டுமென்றருச்சுனன்கேட்க, (எ-று).

(1) கூடுவன்-இதில் அன்விகுதிதன்மையிடத்துவந்தது

வந்தவுடல்வேறாயும்வாசனையாற்றானெலா ற்
சந்தயமென்றற்சொருபந்தானுதற்கென்றவரோ (௩௨)

இ-ள்.

வந்தவுடல்-(கன்மத்துக்)கேதுவாக வந்திராநின்ற சரீரமானது, வேறாயும்-அன்னியமாயிருந்தும், வாசனையாற்-(பழக்கத்தாற்பொருந்திய)மலினவாசனையினால், தானெனலால்-(அதனைத்)தானென்று கூறுதலால், தற்சொரூபந்தானுதற்கு-தன்னுடையசொரூபந்தானுதற்கு, சந்தயமென்-ஐயம்யாதிருக்கின்றது, என்றவரோ-என்று கூறியருளியவரோநீர், (எ-று). சந்தேகம் சந்தயமெனமரீயது.

தனுவைத்தானெனும்பிரமைசத்தஞானத்திலறு
தனுபமெய்ஞ்ஞானத்தாலறும்வகையேதுரையுமென
(௩௩)

இ-ள்.

தனுவைத்தானெனும்பிரமை - தேகத்தைத்தானென்னும் பிராந்தியானது, சத்தஞானத்திலறுது - சாஸ்திரஞான்னிய

மாகிய பரோக்ஷஞானத்தானீங்காமல், அனுபவமெய்ஞ் ஞானத்தால்-எதார்த்தானுபவமாகிய அபரோக்ஷஞானத் தால், அறும்வகையேது-நீங்குகின்றவிதமெங்ஙனம், உரை யுமென-கூறவேண்டுமென்றருச்சுனன்கேட்க, (எ-று).

விளக்குவிளக்கெனுமதனால்வெய்யவிருள்போய்விடு மோ
துளக்கமிலாவிளக்கேற்றிற்றொலையுமிருளென்றவரோ
(௫௪)

இ-ள்.

*விளக்கு விளக்கெனுமதனால்-தீபந் தீபமெனப் பலதரஞ் சொல்லும் வசனத்தால், (1) வெய்யவிருள்போய்விடுமோ-கொடிதாகிய அந்தகாரம் நீங்குமோ (நீங்காது), (2) துளக்கமிலாவிளக்கேற்றில் - சலனமில்லாத தீபத்தை யேற்றினால், தொலையுமிருள்-அந்தகாரம் நீங்கிவிடும், (அதுபோல பரோக்ஷ ஞானத்தாற் றேகநானெனும் பிராந்தி நீங்குமா நீங்காது அபரோக்ஷஞானமுதயமாகில் நீங்கும்) என்றவரோ-என்று கூறியருளியவரோ நீர், (எ-று.) தாஷ்டாந்த மெஞ்சிநின்றமையின் விரித்தாம்.

*விளக்கு விளக்கு என்றது பன்மைப்பொருளில் வந்த அடுக்கு.

தேகோகமென்னும் பிராந்திக்கேதுவாகிய அஞ்ஞா னத்தி னசத்தாவரண மபானாவரணமென்னு மிரண்டமி சங்களிலசத்தாவரணத்தை மாத்திரம் நிவிர்த்திக்குஞ்சத்தி பரோக்ஷ ஞானத்திற்குள்ளதேயன்றி யபானாவரணத்தை யும் நிவிர்த்திக்குஞ் சத்தியின்மையாற் பரோக்ஷஞானத் தாற்றேகோகப் பிராந்தி நிவிர்த்தியாகாதென்பதும் - அப ரோக்ஷ ஞானத்திற்கபானாவரணத்தையும் நிவிர்த்திகுஞ் சத்தியுள்ளதாகலின் அபரோக்ஷ ஞானத்தாற் றேகோகப் பிராந்திபுங்காரணமாகிய வஞ்ஞானத்தோடு நிவிர்த்தியா துமென்பதும் - தோன்றத் திருட்டாந்தரமாயுள்ள இருள்

விளக்கு விளக்கெனும் வசனத்தா னீங்காதெனவும்-துளக்கமிலா விளக்கேற்றினானீங்குமெனவுங் கூறினாரென்க.

(1) எஞ்சியதாட்டாந்தரத்திலுள்ள அஞ்ஞானம் சனனமரண சம்சார துக்கத்திற்கேதுவாக ஆத்மசொரூபத்தை மறைத்திருத்தலின் மிகவுங்கொடியதென்பது தோன்றத் திருட்டாந்தரத்திலுள்ள இருளைவெய்ய விருளென்றார்.

(2) எஞ்சியவுவமேயப் பொருளாயுள்ளஞானம் திடாபரோக்ஷஞானமானமையின் அஃது சலனமின்றிய ஞானமாமென்பதுதோன்ற உவமானப்பொருளாயுள்ள தீபத்தைத் துளக்கமிலா விளக்கென்றார்.

நெடுங்காலமான்மாவை நீங்காதவஞ்ஞான ... ... ம்
விடுங்காலமென்னாளோ மெய்ஞ்ஞானத்தாலெனவே (ருடு)

இ-ள்.

நெடுங்காலம்-நீண்டகாலமாக, ஆன்மாவைநீங்காத - ஆன்மாவைவிட்டு நீங்காதிருக்கப்பட்ட, அஞ்ஞானம்-அஞ்ஞானமானது, மெய்ஞ்ஞானத்தால்-உண்மைஞானத்தால், விடுங்காலமென்னாளோ - நீங்குகின்றகாலமெந்தக்காலமோ, எனவே-என்றருச்சுனன்கேட்க, (எ-று).

அந்தகாரங்குகையிலாயிரநாளிருந்தாலு ... ஞ்
செந்தீபங்கண்டவுடன்றீர்வதுபோலென்றவரோ (ருசா)

இ-ள்.

அந்தகாரம்-இருளானது, குகையில்-மலைக்குகையில், ஆயிரநாளிருந்தாலும்-அனேககாலமாகவிருக்கினும், செந்தீபங்கண்டவுடன்-செவ்விதாகியதீபத்தைக்கண்ட அளவிலே, தீர்வதுபோல்-நீங்குகின்றதுபோல (அளவில்காலமான்மாவைவிட்டஞ் ஞானநீங்காதிருக்கினும் ஞானமுதயமாகிய அளவிலேநீங்கிவிடும்), என்றவரோ-என்றுகூறியருளியவ

ரோ நீர், (எ-று). தாஷ்டாந்தங்கள் எஞ்சிநின்றமையால் விரித்தாம்.

கருமயோகந்தவமேகாரணமாய்நீங்கா ... ... ம
லருமையாய்ஞானம்வந்தோஅஞ்ஞானம்போமெனவே (௫௭)

இ-ள்.

கருமம்-யாகாதிகருமங்கள், யோகம்-பிராணபந்தனுதியோகமுதலிய, தவமேகாரணமாய்-காயக்கிலேசாதிதவங்களே காரணமாக, நீங்காமல்-நிவிர்த்தியாகாமல், அருமையாய் ஞானம்வந்தோ - அடைதற்கருமையாயுள்ள ஞானமுதய மானபின்போ, அஞ்ஞானம்-அஞ்ஞானமானது, போமெனவே-நிவிர்த்தியாகுமென்றருச்சுனன்கேட்க, (எ-று).

குத்துவெட்டும்படைகளினற்கூடுமோவிருடிரக் க
உத்தமமாம்ரவியுதித்தாலோடுமிருளென்றவரோ (௫௮)

இ-ள்.

குத்துவெட்டும்படைகளினற்-குத்துகிறதாயும் வெட்டுகிறதாயுமுள்ள ஆயுதசாலங்களால், இருடிரக்க-அந்தகாரத்தைப்போக்குதற்கு, கூடுமோ-ஆகுமோ,(ஆகாது) (1)உத்தமமாம் ரவியுதித்தால்-உத்தமமான சூரியனுதயமாகில், ஓடுமிருள் - அந்தகாரம்நீங்கிவிடும்(அதுபோலக்கன்மாதி யோகதவங்களா லஞ்ஞான நிவிர்த்தியாகுமோ ஆகாது ஞானமுதயமாகில் நிவிர்த்தியாகும்), என்றவரோ-என்று கூறியருளியவரோ நீர், (எ-று),

எஞ்சியதாஷ்டாந்தங்களேவிரித்தாம்,

(1) எஞ்சியதாட்டாந்தரமாயுள்ள அபரோக்ஷஞானம் சருவதுக்கநிவிர்த்தி-பரமானந்தப்பிராப்திக் கேதுவான

மையின் மிகவுமுத்தமமாயுள்ளதெனும்பொருடோன்றத்திருட்டாந்தரமாயுள்ள சூரியனை-உத்தமமாம் ரவியென்றார்.

அஞ்ஞானவிருடீரக்கவறியாதநல்லகன் ... ... ம
மெய்ஞ்ஞானந்தனைப்பலிக்கும்விதமெவ்வாறெனவினவ (௫௬)

இ-ள்.

அஞ்ஞானவிருடீரக்க-அஞ்ஞானமாகிய வந்தகாரத்தைப்பொக்குதற்கு, அறியாத-சாமர்த்திய மில்லாத, நல்லகன்மம்-சற்கருமங்கட்கு, மெய்ஞ்ஞானந்தனை-தத்துவஞானத்தை, *பலிக்கும்விதம்-உதிப்பிக்குஞ்செயல், எவ்வாறெனவினவ-எங்ஙனங்கூடுமென்றருச்சுனன்கேட்க, (எ-று).

*பலிக்கும்-என்பதில் பிரவிணையையுணர்த்தும் பிவ்விகுதிதொக்கது,'பாலித்தும்-என்றதைப்பலிக்கும் எனக்குறுக்கல்விகாரமாகக்கொள்ளினுமமையும்-

---

கருமமிருவகையாங்காமியநிட்காமியமெ ... ... ன்
றிருவகையினிட்காமமேதுகாணென்றவரோ (௫௭)

இ-ள்.

காமியநிட்காமியமென்று-காமியகருமமென்றும்நிட்காமியகருமமென்றும், கருமமிருவகையாம் - கருமமிரண்டுவகையாகும், இருவகையில் - இரண்டுபிரிவாகிய கருமங்களில், நிட்காமம்-நிட்காமியகன்மமானது, ஏது-ஞானத்தையுதிப்பித்தற்குக்காரணமாகும்,காணென்றவரோ-நீயறிவாயாகவென்றுகூறியருளியவரோநீர், (எ-று).

கருமமேகாரணமாய்க்கட்டுளைத்தீர்வ்வுல ... லை
யொருவும்வகையையெனக்கோதென்றடிபணிய (௫௮)

இ-ள்.

கருமமேகாரணமாய்-நிட்காமியகருமமே (ஞானத்தையுதிப்பித்தற்குக்) காரணமென்று, கட்டுரைத்தீர்-உருகிப்பெறவருளிச்செய்தீர் (அதுபொருந்தும்) (1) இவ்வுலகை-பிரத்தியக்ஷமாகிய விவ்வுலகத்தினின்றும், ஒருவும்வகையை-யானீங்குகின்றவிதத்தை, எனக்கு-அடியேனுக்கு, ஓதென்றடிபணிய-கூறியருளவேண்டுமென்று திருவடியிலருச்சுனன் நமஸ்கரிக்க, (எ-று).

(1) உலகின்-என்றபாலதாகிய ஐந்தாம்வேற்றுமையுருபு உலகையென இரண்டாவதனுருபாகமயங்கிற்று.

இந்திரஜாலம்போலவிவ்வுலகைநம்மிடத்தி ற்
றந்திரமாய்த்தோற்றுவித்தோஞ்சத்தியமலவென்றவரோ
(௯௨)

இ-ள்.

இந்திரஜாலம் போல-அற்புதங்களைக்காட்டு மிந்திரஜாலவித்தையைப்போல,இவ்வுலகை-இந்தப்பிரபஞ்சத்தை,நம்மிடத்தில் -பிரம சொரூபமாகிய நம்மிடத்தில், தந்திரமாய்-அலங்காரமாக,தோற்றுவித்தோம்-தோன்றும்படி செய்வித்தோம்,(1)சத்தியமலவென்றவரோ - இதுஎதார்த்தமல்லவென்று கூறியருளியவரோநீர், (எ-று).

(1) இந்திரஜாலத்தாற்றோன்றிய யானை முதலிய மிருகங்கடன்னைச்சூழ்ந்ததாகக் கண்டச்சமுற்றிவை கட்கப்படாது நீங்கவேண்டுமென்றெண்ணிய பிராந்தனிவைகளிந்திரஜாலத்தாற்றோன்றிய பொய் மிருகங்களென்றறிதலே அவைகளினின்றும் நீங்கியதாகுமெனல்போல்மாயையாற்றோன்றிய விவ்வுலகைமித்தையென்றறிதலே யிவ்வுலகினின்றும்நீங்கியதாகுமென்பதுதோன்றச்சத்தியமலவென்றார்

மித்தையெனுஞ்சகத்துநின்பால்விளங்குமோவெனவினவ
சுத்திதனிலேரசிதந்தோன்றுதல்போலென்றவரோ (௩௩)

இ-ள்.

மித்தையெனுஞ்சகத்து-பொய்யென்றுசொல்லப்பட்ட பிரபஞ்சமானது, நின்பால்-சத்தியமாகியஉம்மிடத்தில், விளங்குமோவெனவினவ-தோன்றுமோவென்றருச்சுனன் கேட்க, சுத்திதனிலே-(சத்தியமாயுள்ள) கிளிஞ்சியினிடத்திலே, ரசிதம்-(மித்தையாயுள்ள) வெள்ளியானது, தோன்றுதல்போல்-தோன்றுகிறதுபோல (சத்தியமாயுள்ளநம்மிடத்தின்மித்தையாயுள்ளபிரபஞ்சந்தோன்றியதாம், என்றவரோ-என்றுகூறியருளியவரோநீர், (எ-று).

அயல்வெள்ளிசுத்தியின்மேலாரோபிதங்கூடு
மியலுள்ளசகமுமுன்வேறிருந்ததுமுண்டோவெனவே (௩௪)

இ-ள்.

அயல்வெள்ளி-அன்னியமாயுள்ளவெள்ளியானது, சுத்தியின்மேல்-(சத்தியவஸ்துக்ஞானஜன்யசமஸ்காராதி தோடத்தால்) கிளிஞ்சியினிடத்து, ஆரோபிதங்கூடும்-ஆரோபிதமாகத்தோன்றுதல்பொருந்தும் (அதுபோல்) இயலுள்ள ஜகமும்-இயல்பாயுள்ள பிரபஞ்சமும், முன்-சிருஷ்டிக்குப் பூர்வம், வேறிருந்ததுமுண்டோ-மித்தையாப்பிரபஞ்சத்துக்கு அன்னியமாகவிருந்ததுமுளதோ, எனவே-என்றருச்சுனன் கேட்க, (எ-று).

மனமயக்கம்பிடிக்கிலில்லாவஸ்துவுந்தோன்றிடுமது வோ
கனவில்விண்ணிற்குருன்பறக்கக்கண்டதுபோலென்றவரோ (௩௫)

இ-ள்.

மனமயக்கம்பிடிக்கில்-மனம்பிராந்தியையடையில் இல்லா வஸ்துவுந்தோன்றிடும் - இல்லாதபதார்த்தங்களும்தோன்றும், அதுவோ-அஃதெங்கனமெனின், கனவில்- சொற்பனத்தில், விண்ணில்-ஆகாயத்தில், தான்பறக்க-(முன்னம்பறவாதிருக்கப்பட்ட) தான்பறந்து செல்வதாக, கண்டதுபோல்-பார்த்தல்போல (பிரபஞ்சமுன்னில்லாததாயிருக்கினும் அஞ்ஞானதோடத்தாலாரோபிதமாகத்தோன்றவுங்கூடும், என்றவரோ-என்றுகூறியருளியவரோநீர், (எ-று). எஞ்சியதாஷ்டாந்தம்விரிக்கப்பட்டது.

கனவுபோற்பிரபஞ்சமென்றீர்கண்விழித்தாற்கனவு பொய்யாம்]
வினவுசகந்தினமுமெய்யாய்விளங்குவதென்சொல்லுமென (கூரு)

இ-ள்.

(*) கனவுபோற் பிரபஞ்சமென்றீர் — சொற்பனத்தைப் போலப்பிரபஞ்சமு(மித்தை)யென்றுகூறினீர், கண்விழித்தால்-கண்விழித்தலாகிய சாக்கிரத்துக்கு வந்த மாத்திரத்தில், கனவு பொய்யாம்-சொற்பனமித்தையாய் விடுகிறது (அங்ஙனமின்றி) வினவுசகம்-சொற்பனசமானமாக விவகரிக்கப்பட்ட பிரபஞ்சமானது, தினமும்-நாள்தோறும், மெய்யாய்விளங்குவது-சத்தியமாக விளங்கிக்கொண்டிருப்பது,என்சொல்லுமென-எதனாலேகூறியருளவேண்டுமென்றருச்சுனன்கேட்க (எ-று)

(*) கனவுபோற்பிரபஞ்சமென்றுபகவவான் கூறியிருப்பதுபோலவே - கைவல்லியநவநீதத்தில். "காண்பவெல்லாஞ்-சொற்பனம்போலுமென்றே துணிந்தவன் ஞானியாவான்". எனக்கூறியிருப்பதுகாண்க.

மெய்யாகவிளங்குவதுமெய்ஞ்ஞானம்வருமளவும்
பொய்யாம்பின்கனவதுபோற்போதம்வரிலென்றவரோ
(கூஎ)

இ-ள்.

மெய்யாக-(பிரபஞ்சஞ்) சத்தியமாக, விளங்குவது-விளங்கிக்கொண்டிருப்பது, * மெய்ஞ்ஞானம் வருமளவும் - தத்துவஞானமுதயமாகும் பரியந்தமும், போதம்வரில் - தத்துவஞானமுதயமாகில், பின்-பிற்பாடு, கனவதுபோல்-சொற்பனமித்தையாவது போல, பொய்யாம்-பிரபஞ்சமுமித்தையாய்விடும், என்றவரோ-என்றுகூறியருளியவரோநீர், (எறு).

(*) சகந்தினமுமெய்யாக விளங்குவதேதனாலென்னுங் கடாவிற்குமெய்ஞ்ஞானம் வருமளவுமென்றமையால்மெய்ஞ்ஞானமுதயமாதற்குப் பூர்வமுள்ள அஞ்ஞானமே பிரபஞ்ச மெய்யாக விளங்குகிறதற்குக் காரணமென்பது விடையென ஊகித்துணர்க.

முன்புகண்டகனவுபொய்யாமொழிசாக்கிரம்போல
வென்றீர்]
பின்புமுத்தித் திசையடைந்தும்பிரபஞ்சநிற்பதேதெனவே
(கூஅ)

இ-ள்.

மொழிசாக்கிரம்-(ஸ்திரமென்றுசொல்லத்தக்க)சாக்கிராவத்தையில், முன்புகண்ட - பூர்வங்கண்ட, கனவு-(அஸ்திரமாகிய சொற்பனம்,பொய்யாம் போல-மித்தையாவது போல(ஞானசாக்கிரத்தில்பிரபஞ்சமு) மித்தையாய்விடும், என்றீர்-என்றுகூறியருளினீர், பின்புமுத்தித்திசையடைந்தும் மோக்ஷநிலைமையையடைந்த பிற்பாடும், பிரபஞ்சநிற்பது-பிரபஞ்சந்தோன்றிக்கொண்டிருப்பது, ஏதெனவே-எதனாலென்றருள்கன்கேட்க, (எ-று).

தெரிந்தவர்க்குத்தோற்றுவதுதெத்தபடம்போல்வ
தல்லாற்]
பரந்தசகங்காரியத்திற்பயன்படாதென்றவரோ (சுசு)

இ-ள்.

தெரிந்தவர்க்கு (சொரூபத்தை) யறிந்தவர்க்கு, தோற்று வது-தோற்றுவதாகிய, பரந்தசகம் - (நாமரூபாத்மகமாக) விரிந்துள்ள பிரபஞ்சமானது, தெத்தபடம்-(அக்கினியினு) லெரிந்த வஸ்திரம், போல்வதல்லால்-போன்றதாகுமேயல் லாமல், காரியத்தில் - (பந்தமுதலிய) காரியங்களைத் தரு தற்கு, பயன்படாதென்றவரோ - உபயோகப்படாதென்று கூறியருளியவரோ நீர், (எ-று).

(1) அக்கினியினுலெரிந்த வஸ்திரம் வஸ்திரம்போற்றோ ன்றுதன் மாத்திரமேயன்றிக் குளிர் நீக்குதன் முதலிய காரி யங்கட்குபயோக மாகாததுபோல ஞானிகட்குப் பிரமாத் மைக்கிய ஞானத்தால்வாதமாகிய பிரபஞ்சம் நாமரூபாத் மகமாகத் தோன்றுதன்மாத்திரமேயன்றிப் பந்தமுதலிய காரியங்களைத் தருதற் கேதுவாகாமையின் காரியத்திற் பயன்படாதென்றார்.

கன்மவினையஞ்ஞானங்கடந்துமதன்காரியமா ம்
புன்மையுறுமெய்யுடனேபோகாததேதெனவே (எ௰)

இ-ள்.

கன்மம்- ஆகாமிய சஞ்சித கன்மங்களும், வினை-வஞ்சிக்கு மியல்பினையுடைய, அஞ்ஞானம் - அஞ்ஞானமும், கடந் தும்-நீங்கியும், அதன்காரியமாம்-அவ்வஞ்ஞான காரியமா கிய, புன்மையுறுமெய் - இழிவுபொருந்திய சரீரமானது, உடனே-கன்மமுமஞ்ஞானமு நீங்கிய அந்த உத்தரக்ஷண மே, போகாததேதெனவே - நீங்காததேதனுலென் றருச்சு னன் கேட்க, (எ-று). கன்மவினையென்னும் பதங்கட்கு

ஆகாமியசஞ்சித கன்மங்களாகிய வினைகளும் - எனப்பொருள் கூறுவதுமுள.

வெட்டவிழுமரம்பசந்துவிளங்குதல்போற்சிலகால
நட்டகன்மமாய்ந்துமங்கநடித்திடுங்காணென்றவரோ (எக)

இ-ள்.

வெட்டவிழுமரம்- (ஒருவரால்) வெட்டப்பட்டு விழுந்த மரமானது, பசந்து விளங்குதல்போல்-பசுமையாகச் (சொற்பநேரம்) விளங்கிக்கொண்டிருத்தல்போல, நட்டகன்மமாய்ந்தும்- (தான்) செய்துள்ள கன்மநசித்தும், அங்கம்- (அதன்காரியமாகிய) சரீரம், நடித்திடும்-நடமாடிக்கொண்டிருக்கும், காணென்றவரோ-நீயறிவாயாகவென்று கூறியருளியவரோநீர், (எ-று).

சென்மம்போய்முத்தியினைச்சேரச்சிலரிருக்கத்
தொன்மையான்மாப்பலவோசொரூபம்பகருமென (எஉ)

இ-ள்.

சென்மம்போய்-சன்மமானதுநீங்கி, முத்தியினை-மோக்ஷத்தை, சேர- (சில) ரடைய, சிலரிருக்க-சில(ரடையாமற்பந்தமுடையராயிருக்கக்காணப்படுகின்றமையால், தொன்மை-பழமையாயுள்ள, ஆன்மாப்பலவோ-ஆன்மா அநேகமோ, சொரூபம் பகருமென-ஆன்மாவின் சொரூபத்தைக் கூறவேண்டுமென்றருச்சுனன்கேட்க, (எ-று).

சிலர் என்றது முன்னருஞ்சென்றியையும், பந்தமென்றது அவாய்நிலையான்வந்தது.

பிரமமென்றுமீசனென்றும்பெருகுபலசீவரென்று
முரைமயக்கமலதான்மாவொருவனேயென்றவரோ (எங)

இ ள்.

பிரமென்றும்-(குணரகிதமாயுள்ள,) பிரமமென்றும், ஈச னென்றும்-சர்வக்கிஞத்துவாதிகுணவிசிட்டனுயுள்ள ஈஸ் வரனென்றும், பெருகு-(கிஞசிக்கிஞத்துவாதிகுணங்க)ணி றைந்துள்ள, பலசீவரென்றும் - அனேகசீவர்களென்றும், உரை-(வேறுபடுத்தி) ச்சொல்வது, மயக்கமலது-பிராந்தி யேயல்லாமல்(எதார்த்தமல்ல), ஆன்மாவொருவனே-ஆத் மாவொருவனெனலே (எதார்த்தம்), என்றவரோ-என்று கூறியருளியவரோநீர், (எ-று). உரை-முதனிலைத்தொழிற் பெயர்.

ஏகந்தானுன்மாவெனும்வகையேமெய்யா
லாகந்தோறும்பலவாயமர்ந்ததென்னேசொல்லுமென ... ...ன

(எசு)

இ-ள்.

ஆன்மா-ஆன்மாவானது, ஏகந்தான்-ஒன்றே, எனும்வகை யே-என்றுகூறும்விதமே, மெய்யானுல்-சத்தியமானுல், ஆ கந்தோறும்-சரீரங்கள்யாவற்றிலும்,பலவாய்-பலவான்மாக் களாக, அமர்ந்ததென்னே-பொருந்தியிருப்பதென்னையோ, சொல்லுமென - கூறியருளவேண்டுமென் றருச்சுனன் கே ட்க, (எ-று).

தோறும்என்றது பன்மைப்பொருளில்வந்த இடைச்சொல்

பலகடத்திற்சலத்தூடுபானுவிம்பந்தோன்றுதல்போ ற்
றலைவில்புத்திதொறுமான்மாத்தோன்றுதல்காணென்ற
[வரோ (எரு)

இ-ள்.

பலகடத்தில் - பலகடங்களிலுள்ள, சலத்தூடு - சலங்களி னுள், பானுவிம்பம் - சூரியவிம்பமானது, தோன்றுதல்

போல்-(பலவாகப்பிரதிபலித்து) த்தோன்றுகிறதுபோல, தொலைவில்புத்திதொறும் - அளவில்லாத புத்திகள்தோறும், ஆன்மா-(ஏகமாயுள்ள) ஆன்மாவானது, தோன்றுதல்-(பலவான்மாக்களாகத்)தோன்றுகிறது, காண்-நீதெரிந்துகொள்வாயாக, என்றவரோ-என்றுகூறியருளியவரோ நீர், (எ-று).

ஆதித்தன்போலான்மாவளவில்புத்திதொறுந்தோன்றிற்
சாதிக்குமுத்தியெவர்தமக்கதனைச்சாற்றுமென (எசா)

இ-ள்.

ஆதித்தன்போல்-(ஒன்றாயிருந்தும் உபாதிவசத்தாற்பலவாகத்தோன்றுகின்ற சூரியனைப்போல, ஆன்மா-ஏகமாயுள்ள ஆன்மாவானது, அளவில்புத்திதொறும்-அளவில்லாதபுத்திகளாகியவுபாதிகடோறும், தோன்றில்-பலவாகத்தோன்றுமேயானால், சாதிக்குமுத்தி - அப்பியாசித்தடையத்தக்க மோட்சமானது, எவர் தமக்கு - எவர்கட்கு, அதனைச்சாற்றுமென - அதனைக் கூறியருள வேண்டுமென்றருச்சுனன் கேட்க, (எ-று).

பந்தமுத்திதானுமந்தப்பரந்தபுத்திதனக்கேயா
மந்தவிம்பந்தனக்கிலையென்றறிவுவரச்சொன்னவரோ (எஎ

இ-ள்.

(1) பந்தமுத்திதானும்-பந்தமோக்ஷமென்பதும், அந்த-முற்கூறிய, *பரந்தபுத்திதனக்கேயாம்- (விடயங்களிற்பரவிய) புத்திக்கேயாகும், அந்தவிம்பந்தனக்கு-அழகியவிம்பசொரூபமாகிய ஆத்மாவிற்கு, இலையென்று-பந்தமுத்தியில்லையென்று, அறிவு வரச்சொன்னவரோ-ஞானமுதயமாகும்படிசொல்லியருளியவரோ நீர், (எ-று).

(1) பந்தமுமுத்தியும்புத்திக்கேயன்றி அந்தவிம்பந்தனக்கில்லையென்றுபகவான்கூறியிருப்பதுபோலவே, வாசிட்டத்தில், "துங்கமெய்யுணர்வாய்ப் பந்தமற்றிருந்துந்தொடர்புறுபந்தமுண்டென்று பங்கமுற்றவரேலமலமாயழியாப் பரம்பொருள்பந்தமுற்றிடுமோ", எம்-"அங்கமற்றொன்றாய் விகற்ப மற்றறிவாயழிவிலாப் பரம்பொருளிருக்கப் பந்தமுற்றவரார் முத்தி பெற்றவரார்பாவனை விகற்பமேயனைத்துஞ்சிந்தனைவிரிவுபந்தமாமதனைத்தீர்ந்திடன்முத்தியாம்", எம்-அருளிச் செய்திருப்பதுகாண்க

பரமேகமாயமதிற்பலசீவரேதென வே
யொருகடலிற்பலகுமிழியுதிப்பதுபோலென்றவரோ (௭௮)

இ-ள்.

பரமேகமாயும்-பிரமமொருதன்மையதாகவிருந்தும், அதில்-அப்பிரமத்தில், பலசீவர்-பலதன்மையவானசீவர்கள், ஏதெனவே-தோன்றுகின்றதெங்ஙனமென்றருச்சுனன் கேட்க, ஒருகடலில்-ஒருதன்மையதானசமுத்திரத்தில்; பலகுமிழி-பலதன்மையவான புற்புதாதிபேனதரங்கங்கள், உதிப்பதுபோல்-காற்றின்செயலாற்றோன்றுவதுபோல, (ஒருதன்மையதானபிரமத்திற் பலதன்மையவான சீவர்கள் கன்மச்செயலாற்றோன்றுவார்கள்) என்றவரோ-என்றுகூறியருளியவரோநீர், (எ-று).

குமிழியென்றதனால் அதற்கினமாயுள்ள பேன தரங்கங்களையும் வருவித்தாம்.

சிவனதுதானென்றுஞ்சேரும்பிரமமென் று
யாவதுவோபேரின்பமாங்கதெனக்கோதுமென (௭௯)

இ-ள்.

சிவன்-சீவனே, தானென்றும்-தனது சொரூபமென்றும், அது-அச்சீவனனது, *பிரமம்-பிரமத்தை, சேருமென்றும்-அடையுமென்றும்(சிலர்கூறுகின்றபடி), ஆவதுவோ-ஆகின்றதுவோ, பேரின்பம்-பிரமானந்தம், அதெனக்கு-அப்பிரமானந்த(முதயமாகும்விதத்தை)யடியேனுக்கு, ஓதுமென-அனுக்கிரகம் பண்ண வேண்டுமென்றருச்சுனன் கேட்க, (எ-று). ஆங்கு-அசை

(*) பிரமம்-என்பதில்சாரியையும்இரண்டனுருபுந்தொக்கன.

ஏகம்பிரமமிரண்டில்லைநீவேறும ல்
சோகமுறும்பேதமறிற்றோன்றுமின்பமென்றவரோ (அம்)

இ-ள்.

*ஏகம்பிரமம்-பிரமமொன்றேயாகும், இரண்டில்லை-(சுசாதி-விசாதி-சுவகதபேதமாகிய) துவிதங்களில்லை, நீ-(ஆன்மாவாகிய)நீ, வேறுமல-பிரமத்துக்கன்னியமுமல்ல, சோகமுறும்-துக்கத்தைப்பொருந்துவதற் கேதுவாகிய, பேதமறிதல்-(2) பேதப்பிராந்தி-நீங்குமேயாகில், இன்பம்-பிரமானந்தமானது, தோன்றுமென்றவரோ-(சுயமாகவே) உதயமாகுமென்று கூறியருளியவரோநீர், (எ-று).

* ஏகம்பிரமமிரண்டில்லையெனப்பகவான் கூறியிருப்பது போலவே-வாசிட்டத்தில்- "பொருகடலிற்றிரைமுதலாய்ப் பிறந்தவெல்லாம் புனலாகிவிளங்காமற் புகுதியாமோ-வொருபொருளாம் பிரமமாத்திரமேயல்லாது பயமெனுங் கற்பனைப்பேரொன்றுமில்லை-வெரியிடத்திற் சூடுமாத்திரமேயல்லாவிரண்டுண் டோவவ்வகைபோலென்று மோரும்"-எனவும்-வேதாந்தசூடாமணியில்- "சுருதியிலுமெக

மேவாத்து விதமென்னுஞ் சொற்கிடையுளேகமெனுஞ் சொல்லதனுக்கயிக்க மரிதிலுணரேவவென்னுமிடைச் சொற்குத்தேற்ற மத்துவிதமெனு மொழிக்குத்துவித விலக்காகக்-கருதுபொருள் வருதலினுலிம்முறையேமாயகற்பனைகள் கடந்து நிரவயமாகியென்றுங்-கிரிதவில்சின்மயமாகுமொரு பிரமந்தனக்குத்தெரித்த சுவகதமுதலாயின மூன்றுமிலையே" -எனவும்-பிரமகிதை-௰௧-வது கடவல்லியோடு சுவேதாச்சுவதரவுப நிடதார்த்தங்களுரைத் தவத்தியாயத்தில்-"பரம்பரனை - யல்லாதொன்றுமில்லையெனவனுபவத்தாலகத்துணர-வல்லார்தமக்குப்பேரின்பம்வடிவாய் மொழியுமாமறைதான்"-எனவுங்கூறியிருப்பது காண்க.

(2) பேதப்பிராந்தியிலிலக்கணத்தையும், அப்பிராந்திநிவிர்த்தியாதற்குரிய திருட்டாந்த சகிதமாகிய விசாரங்களையும்அறிய விரும்பில் விசாரசந்திரோதயம். ௬-வது கலையிற்காண்க.

சிவபேதம்போமோ சித்தொன்றுமோவென. வே
யாவன்மனமறுஞ்சுழுத்தியவத்தையிற்பாரொன்றவரோ (அ௧)

இ-ள்.

சிவபேதம்போமோ-சிவத்துவாதிபேதங்கணீங்குமோ, சித்தொன்றுமோவெனவே-ஒன்றாகிய சின்மாத்திரசொரூபமாகுமோவென்றருச்சுனன் கேட்க, ஆவல்மனம்-விடயங்களிலிச்சையுள்ளமனமானது, அறுஞ்சுழுத்தியவத்தையில்-கெட்டுப்போகாகின்ற சுழுத்தி (1) யவத்தையில், பாரென்றவரோ-பார்ப்பாயென்றுகூறியருளியவரோ நீர், (எறு).

(1) அவத்தையென்பதுகாலம்.

பேதமலவிவ்வுலகம்பிரமமயமென்றறிந்து ம்
பூதமயமாய்த்தோற்றல்போகாததேதெனவே (அ௨)

இ-ள்.

இவ்வுலகம்-இந்தப்பிரபஞ்சமானது, பேதமல - (பிரமத்துக்கு) வேறல்ல, பிரம *மயமென்றறிந் தும் - பிரமசொருபமேயென்றறிந் †திருந்தும், பூதமயமாய்த் தோற்றல்-பஞ்சபூதமயமாகத்தோற்றுதல், போகாததேதெனவே - நீங்காததுயாதினாலென்றருச்சுனன் கேட்க, (எ-று).

(*)மயமென்றதில்-தேந்றேகாரம்விகாரத்தாற்றொக்கது

(†) இருந்தும் என்றதிலுள்ள உம்மைஉயர்வுசிறப்புப் பொருளது.

கானலைநீரென்றோடிக்கண்டவர்க்குத் தீர்ந்தபின்னு ம்
வானுலவுநீராகிவயங்குதல்போலென்றவரோ (அரு)

இ-ள்.

கானலைநீரென்றோடி-பேய்த்தேரினைச்சலமெனக்கருதிச்சென்று, கண்டவர்க்கு-(இதுசலமல்லபேய்த்தேரென்றறிந்தவர்க்கு)தீர்ந்தபின்னும்-சலமென்னும்பிராந்தி) நீங்கியபின்னரும், உலவு-செல்லுகின்ற, வான்-சிரேஷ்டம் பொருந்திய, நீராகி-சலம்போலாகி, வயங்குதல்போல்-(பேய்த்தேர்)தோன்றுதல்போல, (பிரபஞ்சத்தைப்பிரமமயமாகவறிந்திருக்கினும் பஞ்சபூதமயமாகத்தோற்றிக் கொண்டிருக்கும், என்றவரோ-என்றுகூறியருளியவரோநீர், (எ-று).

எஞ்சியபாட்டாந்தரத்தை விரித்தாம் - பிராந்தி என்றது அவாய்நிலையான்வந்தது.

அறிவானுநல்லறிவுமறியப்படும்பொருளு ம்
பிறிவாய்மூன்றாயிருத்தல்பேதமலவோவெனவே (அச)

இ-ள்.

அறிவானும்-ஞாதிருவும், நல்லறிவும்-நன்மையாகியஞானமும், அறியப்படும்பொருளும் - அறியப்படுவதாகியஞேயமும், பிறிவாய்-வெவ்வேறாய், மூன்றாயிருத்தல் - திரிபுடியாகவிருக்கின்றது, பேதமலவோவெனவே - (ஒன்றேபொருளென்னுமத்துவிதசித்தாந்தத்திற்கு) விரோதமல்லவோவென்றருச்சுனன்கேட்க, (எ-று).

சொற்பனத்திற்றனித்தொருவன்றோற்றம்வேறில்லையங்கே
கற்பனையாம்பொருளறிவுகாண்பவன்போலென்றவரோ (அரு)

இ-ள்.

தனித்தொருவன் - தனித்துநித்திரைபண்ணுகின்றவொருவனது, சொற்பனத்தில்-சொற்பனாவஸ்தையில், தோற்றம்-(தோன்றுகின்றதிரிபுடித்) தோற்றங்கள், அங்கேபோல - அச்சொற்பனாவஸ்தையிற்(சொற்பனதிருஷ்டாவுக்கன்னியமாகவில்லாதன) போல, கற்பனையாம்-பொய்யாகிய, பொருள்-ஞேயமும், அறிவு - ஞானமும், காண்பவன் -ஞாதிருவும், வேறில்லையென்றவரோ-சாக்ஷிசைதன்னியத்துக்கன்னியமாகவில்லையென்று கூறியருளியவரோநீர், (எ-று).

கற்பனையாம்பேதங்கள்காணுமற்போம்வகை யை
விற்பனமாயானறியவிளம்புமெனவேவணங்க (அசா)

இ-ள்.

கற்பனையாம்பேதங்கள் - பொய்யாகிய திரிபுடிப்பேதங்கள், காணுமற்போம்வகையை - தோன்றாமற் போகின்றவிதத்தை, விற்பனமாய்-சுருதி, யுக்தி, யனுபவமாக, யானறிய-

அடியேனறியும்பொருட்டு, விளம்புமெனவே - அனுக்கிரகம் பண்ணவேண்டுமென்பதாக, வணங்க - அருச்சுனன் நமஸ்கரித்துவினவ, (எ-று).

துரியமாய்யோகத்தாற்றூயமனம்லயமா ஞ
லரியமூவகைவிகற்பமழியுமென்றுசொன்னவரோ (அஎ)

இ-ள்.

துரியமாம்-துரியாவத்தையையடைதற்கேதுவாகிய, யோகத்தால்-[(*)லயம், (†) விக்ஷேபம், (‡) கஷாயம் (§) ரசாஸ்வாதமென்னும் நான்கு பிரதிபந்தங்களுமின்றித் தியானிக்கின்ற] நிதித்தியாசனத்தால், தூயமனம் - பரிசுத்தமாகிய சாத்வீக மனதும், லயமானல் - பிரமசொரூபாகாரமாக வொடுங்குமானல், அரியமூவகைவிகற்பம்-நீங்குதற்கருமையாயுள்ள (||) திரிபுடிவிகற்பங்கள், அழியுமென்று -தோற்றமின்றிக்கெடுமென்று, சொன்னவரோ - சொல்லியருளியவரோ நீர், (எ-று),

(*) தியானநிமித்தம் விடயங்களினின்றுந்திருப்பப்பட்ட மனது தியானத்திற் பிரவருத்தியாது வெகுநாட்பழகிய சுழுத்திப்பழக்கத்தாற் சுழுத்தியிற்செல்வதுலயமாம்.

(†) லயத்துக்குக்காரணமாகிய நித்திராசேட மசீரணமதிகபோசனஞ் சரீரசிரமமென்னும்நான்கிற்குறைவறநித்திரைசெய்தலா னித்திராசேடத்தையும் - முன்புசித்த அன்னமுதலியவை சீரணிக்கும்பரியந்தம்போசனஞ்செய்யாதிருத்த லற்பபோசனஞ்செய்குதன் முதலியவேதுக்களா லசீரணத்தையு மதிகபோசனத்தையும்-அலைச்சல் முதலியதொழில்களின்றியிருத்தலாற்சரீரசிரமத்தையும்-நீக்குவித்தலாலேனும் - அல்லது பிராணாயாமத்தாலேனும் - லயத்தினின்றுந்திருப்பப்பட்டமனது தினந்தோறும் பழகிய சாக்கிரசம்ஸ்காரத்தாற் சத்தாதி விடயங்களையும் விடயபோகங்களையும் கருதியுவ்வகளிற்பிரவருத்திப்பதே விக்ஷேபமாம்.

(‡) சத்தமுதலிய போக்கியவிடயங்களில் அசத்தாதியிலக்கணங்களையு மவைகளையடைதலால் வருந்துக்கங்களையும் - பிரமத்தின் சச்சிதானந்த விலக்கணங்களையுமதனையடைதலால் வரும் பரமசுகத்தையும் சிந்தித்துப்பார்க்குதலாலேனும்-அல்லது சாக்கிரசொற்பனங்கள்சுழுத்தியிலில்லாதனபோல அசத்து ரூபமாகிய போக்கியவிடயங்கள் சத்துருபமாகிய பிரமத்திலில்லையெனப்பார்க்கின்ற வாததிருட்டியினாலேனும் - அல்லது விடயங்கள் தோணினுஞ் சொற்பனஞ் சுத்திகாரசிதம்போற் பொய்யெனப்பார்க்கு மித்தையா திருஷ்டியினாலேனும்-அல்லது நானாவிதபேனதரங்கபுற்புததிவலைகளனைத்தையுஞ் சலமயமாகப் பார்க்குதல்போல நானாவிதபேதபோக்கிய வஸ்துக்களாகிய திரிசியங்களனைத்தையு மகண்டேகரசப்பிரமமாகிய தனதுசொரூபமாகவே பார்க்கின்ற தன்மய திருட்டியினாலேனும் - அடிக்கடியுதயமாகின்ற சகலவிக்ஷேபங்களையுஞ் சாக்கிரதையாயிருந்து நாசஞ்செய்து திருப்பப்பட்டமனது பின்னரும்லயவிக்ஷேபங்களிற்செல்லுமாயினதனை நிரோதித்துத் தியானம்பண்ணும்போதம்மனது தீவிரராகத்துவேஷாதிவாசனையினாற் றுக்கங்களின் மூழ்கிச் சமாதியிற்போலே காக்கிரமா யிருத்தலே கஷாயமாம்.

($) கஷாயத்தை யிதுவேசமாதி யெனப்பிரமிக்காமல் விவேகபுத்தியாற் சூட்சுமமாகப்பார்த்து விக்ஷேபநிவிர்த்திக்குக் கூறியவுபாயங்களா னிவிர்த்தித்துத் தியானஞ்செய்து வருங்காற் சமாதியாரம்பத்திற் சவிகற்பமாகவுதிக்கின்ற ஆனந்தானுபவத்தை யிதுவேபரமானந்தானுபவமென்றவ்வானந்தத்திற்றானே மனது மூழ்கியிருத்தல் ரசாஸ்வாதமாம்.

(வினா)-ரசாஸ்வாதத்தையும் பிரதிபந்தமாகக்கூறியதென்னையெனின்-

(விடை)-ரசாஸ்வாதமென்னும் விகற்பசகிதமாகிய ஆனந்தமானது இதுவே பரமானந்தமென மனதுமூழ்கி மேலான நிருவிகற்பமாகிய ஆனந்தத்தை யடைய விரும்பாதிருத்தற்கேதுவாயிருத்தலின் பிரதிபந்தமெனக்கூறியதென்க.

(வினா)-நிருவிகற்பமாகிய பரமானந்தமெங்ஙன மனுபவிக்கக்கூடுமெனில்.

(விடை)-ரசாஸ்வாதத்திற்றானே நின்றுவிடாமல் விவேகத்தால் நீங்கித் தயிலதாரைபோல நிரந்தரம் நெடுங்காலம் நேயத்தோடு லயமுதலியபிரதிபந்தங்களின்றித்தியானிக்கின்ற தியானப்பியாச பலத்தினாலு மீஸ்வரகிருபையினாலுந் தியானமுந்தியானிக்கின்ற புருடனுமிழந்து தியானவஸ்துவாகிய பிரமசொரூபமாத்திரமாகச் சேடித்துள்ள நிருவிகற்பசமாதியையடைந்து அதுவும் லயமோகசாயமோவென மயங்கி நிலைபெயர்ந்து விடாமற்றிரமாகநிற்கின்ற சமாதியப்பியாசத்தால் மனதுபரிபூரண பரப்பிரமசொரூபத்திற் பாலிற்கலந்த சலம்போலகண்டேகரசமாகக்கலந்து விசிராந்தியடையிற் சூட்சுமமாகச்சாந்தி யடைந்துள்ள அம்மனோவிருத்தியில் நிருவிகற்ப பரமானந்த மாவிற்பவிக்கப்பட்டனுபவிக்கக் கூடுமென்க.

(||) திரிபுடிவிகற்பம் பதினான்கு விதமாம் - இவைகளை யறிய விரும்பில் விசாரசாகரம் - ரு-வது தரங்கத்தினும் விசாரசந்திரோதயம் - ரு-வது கலையினும் - பதார்த்தமஞ்சூசா - ௰சு-வது பதார்த்தவருணனையினும் பாலபோதம் ௬-வது உபதேசத்தினுங்காண்க.

திரிபுடியென்பது-மூன்றுமோர்காலத்துச் சேர்ந்திருப்பனவாயும் மூன்றிலொன்றில்லாதகாலத்து மற்றிரண்டு

மில்லாதனவாயு - முள்ளனவேவைவயோ அவைகட்குத்திரிபுடியென்று பெயர்-ஞாதிருஞானம் - ஞேயமாகிய மூன்று மோர்காலத்துச்சேர்ந்திருப்பனவாயும் - மூன்றிலொன்றில்லாதகாலத்துமற்றிரண்டுமில்லாதனவாயுமிருப்பதையுய்த்துணர்க.

சிறந்திருக்குமான்மாவுஞ்செகமெல்லாநிறைந்திருந்து
மறைந்தெனக்குத்தோன்றாதவகையேதுசொல்லுமென (அஅ)

இ-ள்.

சிறந்திருக்குமான்மாவும் - (திரிபுடிரகிதமாய்ச்)சிறப்புற்றிராநின்ற பரமாத்மாவும், செகமெல்லாம்- பிரபஞ்சமெல்லாவற்றினும், நிறைந்திருந்தும் - நிறைவுற்றிருந்தும், எனக்கு- அடியேனுக்கு, மறைந்து - மறைவுற்று, தோன்றாத- விளங்காதிருக்கின்ற, வகையேது - விதம்யாதினால்,சொல்லுமென - அதனைக்கூறியருள் வேண்டுமென்றருச்சுனன் கேட்க, (எ-று). உம்மையிரண்டனுள் முன்னையது உயர்வுசிறப்பு - பின்னையது - ஆக்கம்.

சத்துச்சித்தானந்தந்தான்மூன்றுமதனுடனே
யொத்துற்றுநாமவுருவஞ்சகமாகி (அகூ)

இ-ள்.

சத்துச்சித்தானந்தமூன்றும் - அஸ்திபாதிப்பிரியமென்னுமூன்றிலக்கணங்களும்(பொருந்திய), அதனுடனே - அப்பிரமத்துடனே, நாமவுருவம் - நாமரூபமாகிய விரண்டும், ஒத்துற்று - சேர்ந்து - சகமாகி - பிரபஞ்சமாகி, (எ-று). தான் - அசை.

இருக்கையினீற்றோன்றுதிவைமூன்றும்பிரமமெ ன
மரிக்கில்வரும்பின்னிரண்டுமரிசகமென்றுரைத்தவரோ
(கூய)

இ-ள்.

இருக்கையினில்-இருக்குன்றபடியால், தோன்றுது -(ஆத்மா). விளங்கமாட்டாது, இவைமூன்றும் (சச்சிதானந்தமாகிய) இவைகள்மூன்றும், பிரமமென - பிரமவிலக்கணமெனவும், பின்னிரண்டும் - பிற்கூறிய நாமரூபமாகியவிரண்டும், மரிசகமென்று - கெட்டுப்போகாகின்றபிரபஞ்சவிலக்கணமெனவும், ஸ்மரிக்கில்-சிந்திக்கில், வரும்-(உனக்குஆன்மாவிளங்கும்படிவரும் - என்றுரைத்தவரோ - என்றுகூறியருளியவரோநீர், (எ-று).

அறிந்துகொள்ஞானத்தாலேயான்மாவை யென்றுரைத்தீர்
சிறந்தொளிருமான்மாவுந்திரிசியமாமோவெனவே (கூக)

இ-ள்.

ஆன்மாவை - ஆத்மசொரூபத்தை, ஞானத்தாலே - தத்துவஞானத்தால், அறிந்துகொள்ளென்றுரைத்தீர் - அறிந்துகொள்வாயாகவென்றுகூறியருளினீர், சிறந்து - சச்சிதானந்தமயமாகச்சிறப்புற்று, ஒளிருமான்மாவும் - பிரகாசிக்கப்பட்ட (1) ஆத்மாவும், திரிசியமாமோவெனவே - (பிரபஞ்சத்தைப்போல) விஷயமாகுமோ வென் றருச்சுனன் கேட்க, (எ-று).

(1) ஆன்மாவுமென்ற எச்சவுமமையால் பிரபஞ்சத்தைப்போலெனவிரிக்கப்பட்டது, இதனை - உயர்வு - சிறப்பாக ஆக்கிலும்அமையும்.

முந்தியஞானத்தாலேமுதிருமஞ்ஞானந்துரக்கி ல்
சிந்தையிலான்மாச்சுயமாய்த்திகழுமென்றுசொன்னவரோ
(கூஉ)

கீதாசாரத்தாலாட்டு.

இ-ள்.

முந்தியஞானத்தாலே - முதன்மையாயுள்ள தத்துவஞானத்தால், முகிரும்-அதிகரித்துள்ள, அஞ்ஞானந்துரக்கில் - அஞ்ஞானத்தைநிவிர்த்திக்கில், சிந்தையில் - சித்தத்தின்கண், ஆன்மா - ஆத்மாவானது, சுயமாய்த்திகழுமென்று - தன்மயமாகவிளங்குமென்று, சொன்னவரோ - கூறியருளியவரோநீர், (எ-று).

இனியமுத்திச்சுகமிருப்பதெப்படியென்றேவின வ
வனுபவத்திலறிவிடயானந்தம்போலென்றவரோ, (கூ௩)

இ-ள்.

இனியமுத்திச்சுகமிருப்பது - இனிமையாயுள்ள மோக்ஷசுகமிருக்கின்றது, எப்படியென்றேவினவ-எதுபோலவென்றுருச்சுனன்கேட்க, விடயானந்தம்போல்-விஷயசுகத்தை(யனுபவித்தறிவது) போல, * அனுபவத்திலறி -(மோக்ஷசுகத்தையும்-) உனதுசுவானுபவத்திலறிந்து கொள்வாயாக - என்றவரோ - என்றுகூறியருளியவரோநீர், (எ-று).

(*) சருக்கரையின் சுவையாதெனுங் கடாவிற்குத் தித்திப்பென விடைகூறுங் காலையிற் றித்திப்பெங்ஙனமிருக்குமென வினவியவர்கட்கு அனுபவித்தறிவாயெனலேயன்றி வாக்கினாலிங்ஙன மிருக்குமென் றுரைத்தற்குக் கூடாதது போல மோக்ஷசுகமு மனுபவித்தறியக் கூடியதேயன்றி வாக்கினா லிங்ஙனமிருக்குமென் றுவமித்துரைத்தற்குக் கூடாததென்பதுதோன்ற - அனுபவத்திலறி விடயானந்தம்போலென்றார்.

மனலயம்வந்தவரலதுமற்றிலரோமுத்தரெ னச்
சனகனைப்போற்சீவன்முத்தர்தாமுமுளரென்றவ ரோ
(கூ௪)

இ-ள்.

மனலயம் வந்தவரலது - மனோநாசம்வந்தவர்களேமுத்தர் களல்லாமல், மற்றிலரோ முத்தரென-(மனோநாசமின்றிய மற்றயர்கள் சீவன் முத்தர்களல்லரோ வென்றருச்சுனன் கேட்க, சனகனைப்போல்-(விவகாரதிசையிலிராநின்ற)சன கராசனைப்போல, சீவன்முத்தர்தாமும்-(மனோலயமின்றிய பிரமவித்துக்களாகிய) சீவன்முத்தர்களும், உளரென்ற வரோ-இருக்கிறார்களென்று கூறியருளியவரோநீர், (எ-று), தாம் = சாரியை,

---

சீவன்முத்தியடைந்தோர்கள்செயலுமவர்தங்குண மு
நாவுரைக்கும்வாசகமுநானறியச்சொல்லுமென (௬௫)

இ-ள்.

சீவன் முத்தியடைந்தோர்கள் - சிவத்துவம் விடுபட்டிரா நின்ற முத்தியையடைந்தவர்களினது, செயலும்-ஒழுக்க மும், அவர்தங்குணமும் - அவர்களினது குணங்களும், நாவுரைக்கும் வாசகமும் = அவர்கள்நாவினால்வசனிக்கும் வசனங்களும், நானறியச் சொல்லுமென = அடியேனறியும் படியாகக் கூறியருள வேண்டுமென்றருச்சுனன் கேட்க, (எ-று).

வருங்கருவுபிறப்பினோடுவளர்தல்பருத்தல்குறை த
லோருங்கலுமெய்கென்றதனையொருத்திருப்பாரென்ற
[வரோ] (௬௬)

இ-ள்.

வருங்கருவு=(கன்மத்துக்குத்தக்கதாக) வராநின்ற கருப்ப மாதலும், பிறப்பினோடு (பூமியிற்) பிறத்தலோடு, வளர் தல்=வளர்தலும், பருத்தல் = பருமனாதலும், குறைதல் =

மெலிதலும், ஒருங்கலும் = நாசமடைதலுமாகிய சட்பாவிகாரங்கள், மெய்க்கென்று = சரீரத்துக்கேயென்றறிந்து, அதனை=அச்சரீரத்தினை, ஒறுத்திருப்பாரென்றவரோ = அபிமானியாது வெறுப்புற்றிருப்பார்களென்று கூறியருளியவரோநீர், (எ-று).

பார்ப்பதுவுங்கேட்பதுவும்பகர்வதுவுஞ்செல்வதுவு
மேர்ப்பதுவுங்கரணதன்மமெனப்புகல்வாரென்றவரோ
(கூஎ)

இ-ள்,

பார்ப்பதுவும்=உருவங்களைப்பார்க்குதலும், கேட்பதுவும்-சத்தங்களைக்கேட்குதலும், பகர்வதுவும்=வசனிக்குதலும், செல்வதுவும் = கமனாகமனஞ்செய்குதலும், ஏர்ப்பதுவும்=வாங்குதல் கொடுத்தலும், கரணதன்மமென - கரணங்களினது தருமமென்பதாக, (*)புகல்வாரென்றவரோ = வசனிப்பார்களென்று கூறியருளியவரோ நீர், (எ-று).

வாசகமுரைத்தல்.

(1) தவிர்ந்தாரெனவும் பாடமுளது - அங்ஙனமாயின் புகல்வாரென்றதையே பாடமாகக்கொண்டு பொருள் கூறியதென்னையெனின் - பழமையாயுள்ள சிலபிரதிகளிற் புகல்வாரென்றிருந்தமையினாலும் - கூடு-வது- செய்யுளில் அருச்சுனன் பகவானைநோக்கிச் சீவன் முத்தர்கள் நாவுரைக்கும் வாசகமும் நானறியச்சொல்லுமென்ற கடாவிற்குப் புகல்வாரென்ற விடைபொருத்தமாயமைதலினாலும்-சாஸ்திரவிரோதமின்மையினாலும்-புகல்வாரென்றதையே கொண்டு பொருள் கூறினும்-தவிர்ந்தாரென்றதையே கொள்ளில் - அவைகளிலுள்ள அபிமானங்கணீங்கியிருப்பார்களெனப்பொருள்படும் அங்ஙனமாயின் அருச்சுனன்வினாவியகடாவிற்குப்-பகவான் விடை கூறாது தவிர்ந்தாரெனல்வரும்.

பசிதாகமுயிர்க்கெனவேபயந்துக்கஞ்சுகங்காம ம்
வசிகோபமதிக்கெனவேமகிழ்ந்திருப்பாரென்றவரோ (கூஅ)

இ-ள்.

பசிதாகமுயிர்க்கெனவே- பசியும் - தாகமும் பிராணனுக் கெனவும், பயந்துக்கஞ் சுகங்காமம்—பயமும்துக்கமும் சுகமும் காமமும், வசிகோபம்-குற்றம்பொருந்தியகோபமும், மதிக்கெனவே-புத்திக்கெனவும், (ஆன்மாவுக்கில்லையென வுமறிந்து)மகிழ்ந்திருப்பாரென்றவரோ-சதாமகிழ்ச்சியோடிருப்பார்களென்று கூறியருளியவரோநீர், (எ-று) குணமுரைத்தல்.

வீடுந்தாரமுமுறவுமேவியென்றுமிருந்தா லு
நீடுந்தாமரையிலைநீர்நிகரொப்பாரென்றவரோ (கூகூ)

இ-ள்.

வீடும்-கிரகத்தோடும், தாரமும்-மனையாளோடும், உறவும்-சுற்றத்தாரோடும், என்றும்-சதாகாலமும், மேவியிருந்தாலும் - கூடியிருந்தாலும், நீடும்-செழித்துள்ள, தாமரையிலைநீர் நிகரொப்பார்-கமலபத்திரோதகம் போலப் (பொருந்தியும் பொருந்தா) திருப்பார்கள், என்றவரோ-என்று கூறியருளியவரோ நீர், (எ-று). செயலுரைத்தல்-நீடுதல்-செழித்தல்.

பற்றிடுங்காயமுந்தானும்பன்னாளொன்றாயினும் பி
னுற்றபுளியம்பழமுமோடுமொப்பாரென்றவரோ (ம)

இ-ள்.

பற்றிடுங்காயமும்-(சடமாகப்) பொருந்திய சரீரமும், தானும்-ஆத்மாவாகியதானும், பன்னாள் - அனேககோடிகா

லம், ஒன்றாயிடினும் - ஏகமாகக்கூடியிருக்கினும், உற்ற பின்-ஞானமடைந்தபின்னர், புளியம்பழமும்-சிந்தகக்கனியும், ஓடுமொப்பார்-அதன் ஓடும் போற்பற்றின்றியிருப்பார்கள், என்றவரோ - என்றுகூறியருளியவரோநீர், (எ-று), செயலுரைத்தல்.

கூறுமுலகியற்கையுடன் கூடினுமெய்ஞ்ஞானம்வந்தோர்
சேறும்பிள்ளைப்பூச்சியும்போற்றிரிவார்காணென்றவரோ (௱க)

இ-ள்.

மெஞ்ஞானம்வந்தோர் - உண்மைஞானமுதயமாகியசீவன்முத்தர்கள், கூறும் - அசுத்தாதியிலக்கணங்களுடையதெனச்சொல்லப்படுகின்ற, உலகியற்கையுடன்-உலகசுபாவத்தோடு, கூடினும்-பொருந்தியிருக்கினும், சேறும்பிள்ளைப்பூச்சியும்போல் - சேற்றையு (மதிற்சஞ்சரிக்கின்றபிள்ளைப் பூச்சியையும்போல், திரிவார்காணென்றவரோ- (1) (அசங்கமாகவே),சஞ்சரித்துக்கொண்டிருப்பார்களென்று கூறியருளியவரோநீர், (எ-று). செயலுரைத்தல்.

(1) சங்கம், கலத்தல்-அசங்கம்கலத்தலின்மை ஆன்மாவேயசங்கமாயுள்ளதென்னும் விசாரமறியவிரும்பில்எமது கருணைமதயானையென்னும் பிரமானந்தசாகர சொரூபராகிய கோயிலூர்ச்சிதம்பரசுவாமிகள் செய்தருளிய இலக்கணவிருத்தியிற்காண்க.

ததியூடுகெடைந்தவெண்ணெய்தான் மோரிற்கிடப்பது [போன்]
மதியோடுகூடினும்பின்மயங்கார்காணென்றவரோ (௱உ)

உ

சிவமயம்.

சிதம்பரதேசிகர்பதிகம்.

இஃது.

பிரமானந்தசாகர சொரூபராகிய, ஸ்ரீ கோயிலூர்ச்
சிதம்பர சுவாமிகள் மாணாக்கராயும் - திருவாரூரைச்
சேர்ந்தவன் மீகபுரத்திலெழுந்தருளிய ஸ்ரீ குருதக்ஷிணா
மூர்த்தி சுவாமிகளாதீனத்திற்குரியவராயுமுள்ள மது
ரைச்சிவானந்த சுவாமி களாலியற்றப்பட்டது.

வெண்பா.

சீரார்கழனிச்சிதம்பரமாதேசிகன் மே
லேரார்பதிகமியம்புதற்கு-நேர்துணையா ம்
வஞ்சக்கயமுகனைமாறுபடவென்றவைங் து
கஞ்சக்கரக்கற்பக ... ... ம்

எழுசீர்க்கழிநெடிலாசிரியம்.

திரிவ்யமேலெழுது மெழுத்தினுக்கிடமை நேர்மையாய் வடி
க்குநர்போலப், பாரின்மேலழியுமுடம்பினை வளர்க்கப் பல
பொருட்டேடி கொந்தலையுங், காரிருணிகர்த்தமனத்தினே
னொற்குக திரலெந்நாளுநரையாய், சீரருட்கடலே கழ (க)
லியம் பதிவாழ்சிதம்பரதேசிகோத்தமனே,

உய்யநூலுரைக்குஞ் சாதனவகையிலொன்றையு மடைந்
திலேன் மடவார், மையன்மேற்கொள்ளு நெஞ்சினே னிச்
சைமாய்த்த நின்னடியர்போற்பேசும், பொய்யனேன் றனை
யுங்கைவிடேல் விடினுன்புகழினுக்கழகின்றுங் கருணை,
செய்யவேவேண்டுங் கழனியம்பதிவாழ் சிதம்பரதேசிகோ
த்தமனே, ... (௨)

தந்தைதாய்புதல்வர் தம்பிழைநோக்கித்தணந்திடல்வழக்
கன்றுமதுபோ, லெந்தைநீயெனது பெரும்பிழைநோக்கி
யிகழ்ந்து கைவிட்டிடேல் விடின்மு, னிந்தையில்கருணை
நிதியெனநின்னைநிகழ்த்தியமறைகள் பொய்த்திடுமால், சிந்
தனைக்கரியாய் கழனியம்பதிவாழ் சிதம்பரதேசிகோத்த
மனே ... ... (௩)

கனிகையைமணந்துபினமவட்கின் பங்கலவியிற்றந்திடார்
போல, வென்னைநினதடியர்குழுவிடையொருவனெனமுனஞ்
சேர்த்தனைபின்னர், தனையெனக்கருளியறிவுருவின் பந்தந்
திலையென் செய்வேனந்தோ, தினையளவெனினு மீய்ந்த
ருள் கழனிச்சிதம்பரதேசி கோத்தமனே ... (௪)

புகழினைவிரும்பித்துறவர் போனடிக்கும் பொய்மையேனி
ன்னன்பர்குழுவின், மகிழ்வுறச்சேர்ந்தும்நன்னடையிலா
மடமையேனென் செய்வேன்பவமா, மகழிடைமூழ்கியயர்
வுறுகின்றேனஞ்சலென் றெனக்கருள்புரிவாய், திகழ்மணிக்
குன்றே கழனியம்பதிவாழ் சிதம்பரதேசிகோத்தமனே (௫)

மடமையாலுழலும் புன்மையேனையும்வாழ்விப்பதுன்
பரமன்றோ, படமதிற்றோன்று மோவியவினங்கள் படத்
திலுக்கிதரமில்லதுபோற், சடமதாமுடல முதற்பிரபஞ்
சந்தனக்கு வேறிலையெனவாய்ந்து, திடமுறத் தெளிந்த
துறவர் வாழ்கழனிச் சிதம்பரதேசி கோத்தமனே (௬)

இ-ள்.

ததியூடுகடைந்தவெண்ணெய்-தயிரின்கட்கடைதலாலுண்டாகிய நவநீதமானது, மோரிற் கிடப்பதுபோல்-மோரினிடத்துச்சம்பந்தமின் றிக்கிடத்தல்போல, பின்-ஞானமடைந்தபின்னர், மதியோடுகூடினும்-புத்தியோடுசேர்ந்திருக்கினும், மயங்கார்-மயக்க மடையார்கள், காணென்றவரோ-நீயறிவாயாகவென்றுகூறியருளியவரோநீர், (எ-று).

அருச்சுனன்றன்பொருட்டாகவனைவருக்குஞ்ஞானம்வரப்
பொருந்தியதேசிகவடிவாம்புண்ணியரேகண்வளரீர் (கஅ)

இ-ள்.

அருச்சுனன் றன்பொருட்டாக - அருச்சுனனிமித்தமாக, அனைவருக்கும்-சகலமுமுட்சுக்களுக்கும், ஞானம்வர-ஞானமுதயமாகும்படி, பொருந்திய - அமைந்தருளிய, தேசிகவடிவாம் - குருவடிவமாகிய, புண்ணியரே கண்வளரீர் - புண்ணியமூர்த்தியே, நித்திரைசெய்தருளும், (எ-று).

ஆயர்குலமாதரளவிலோரைப்புணர்ந்து
தூயபதினாறாயிரவருடன்றோய்ந்திருந்தும் (௱சு)

இ-ள்.

ஆயர்குலமாதர் - யாதவவம்சஸ்திரீகள், அளவிலோரைப் புணர்ந்தும் - அளவில்லாதவர்களைச்சேர்ந்தும், தூய-பரிசுத்தமாகிய, பதினாறாயிரவருடன் - பதினாறாயிரமிராசஸ்திரீகளோடு, தோய்ந்திருந்தும் - கூடியிருந்தும், (எ-று).

பரமமுனிவர்முன்னேபரிச்சித்தைத்தீண்டியவன்
பிரமசரியஞ்செலுத்தும்பெரொளியேகண்வளரீர் (௱ரு)

இ-ள்.

பரமமுனிவர்முன்னே - மேலானமுனீஸ்வரர்கள்முன்பாக, பரிச்சித்தைத்தீண்டி -பரிச்சித்தரசனைப்பரிசித்து, அன்று - அக்காலத்தில், பிரமசரியஞ்செலுத்தும் - பிரமசரியத்தன்மையைநடாத்திய, பேரொளியே - பெருமைபொருந்தியசைதன்னியமே, கண்வளரீர் - நித்திரைசெய்தருளும் (எ-று)

வெண்பா.

ஆதிமூலம்விசயற்காதிமறையின்பொருளை
யோதியுணர்த்தியவிவ்வுண்மையினைக் காதலுற்றுக்
கற்றோருங்கேட்டோருங்காசினியில்வாழ்ந்துமுத்தி
பெற்றோர்கண்முத்தர்பெறும்பேறு ... .(௭௬)

இ-ள்.

ஆதிமூலம் - யாவுக்குமுதன்மையாயுங்காரணமாயுமுள்ள பகவான், விசயற்கு - அருச்சுனனுக்கு, ஆதிமறையின் பொருளை - முதன்மையாயுள்ளவேதார்த்தத்தை, ஓதியுணர்த்திய - உபதேசமூலமாகத்தெரிவித்துள்ள, இவ்வுண்மையினை -(எதார்த்தபோதகமாகியகீதாசாரமென்னும்)இம்மெய்நூலை, காதலுற்று-பிரியமுற்று, கற்றோரும் - படித்தவர்களும், கேட்டோரும்-குருமுகமாகச்சிரவணஞ்செய்தவர்களும், காசினியில் வாழ்ந்து-உலகத்திற் சுகவாழ்வையுற்று, முத்தர்பெறும்பேறு-சீவன் முத்தர்களடையும்பிரயோசனமாகிய, முத்தி-விதேககைவல்லியமென்னு மோக்ஷத்தை, பெற்றோர்கள்-அடைந்தவர்களேயாம், (எ-று).

முற்றிற்று.

பத்தர்கட்கருளும் பேரருட்பிழம்பே பாவியேன்மனத்துறு
மகந்தைப், பித்தறக்கருணைசெய்திடினின் மேற்பிழைசொல்
வாருலகிலுண்டென்றோ, வித்தலத்துனையே கதியென
விரும்புமெனக்கருள் செய்திலைஞான, சித்தர்கள் பரவுங்
கழனியம்பதிவாழ் சிதம்பரதேசிகோத்தமனே ...(எ)

இடம்பொருளேவலெனும் பெருஞ்சுமையை யெடுத்தலே
சுகமெனக்கருதி, மடம் புகுந்துழலச் செயுமடமதனை
மாய்த்துமெய்ச்சிவமதேயிடமா, யிடரறக்கொண்டு பின்ன
மற்றொளிரவெந்தைநீயருள்செய்வாய்செய்வாய், திடமனத்
தடியர் பரவவாழ்கழனிச் சிதம்பரதேசிகோத்தமனே (அ)

சுத்திகாரசிதங்கானனீர்க்கயிற்றிற்றோன்றரவெனத்திகழு
லகைச், சத்தியமெனயான் மடமையாற் கருதித்தளர்வுறு
வண்ணாநீயருள்வாய், அத்தனேயரசேயென்னையே யமுதே
யப்பனே யொப்பிலாமணியே, சித்தனேசெல்வக்கழனியம்
பதிவாழ் சிதம்பரதேசிகோத்தமனே. ... ... (கூ)

பருதியையடைந்தும் பனிக்குளிர்நீங்காப் பான்மைபோற்
சுகவடிவெனவே, சுருதிசொல்நின்னையடைந்துமியானென்
ஞேதுயரதுநீங்கிலேனந்தோ, கருதியதளிக்குங் கற்பகரா
ஜகட்கரோன்னிறையொடு மமர்ந்த, திருநெலையுமையாள்
காப்புறுங்கழனிச் சிதம்பரதேசிகோத்தயனே. ... (ய)

முற்றிற்று.

சிதம்பரதேசிகர்தோத்திரம்.

எத்தனையோசனன மெடுத்தந்தோவந்தோ வேழையேன்
படுந்துயருக்கிலக்குமுண்டோ-வத்தனையுந் தெரிந்திருந்து
மிரங்குகில்லாயாகிலினி யெனக்கருள் வாராரோகிட்டாப்
புத்த முதேயருட்பிழம்பே கருணைவாழ்வே பூரணனந்த
மயப்பொலிவேஞான-சித்தரெலாம் பரவவளர்கழனிவாழு
ஞ்சிதம்பர தேசிகப்பிரமதேவதேவே. ... (க)

அய்யநின்னடியர் தமிலொருவன் யானுமளவில் பவப்
பிணிப்பசியா லந்தோவந்தோ - நையமற்றையடியரெலாம்
பிரமானந்த நறுமமிர்துண் டகங்களித்துவாழ்தலென்னை-
மையல்செயும் வினைப்பயனுமெனிலோ நின்னைவல்லகருணை
நிதியென்றுரைத்தலென்னே - செய்யமறை முழங்குதிருக்
கழனிவாழுஞ் சிதம்பரதேசிகப்பிரம தேவதேவே. (உ)

பித்தர்செயும் பிழைநோக்கார் பெரியோராங்கு பேத
மையாணவப்பேய்தான் குடியாய்க்கொண்ட - மத்தமதி
யினன்யான் செய்பிழை நீநோக்கல் வழக்கன்றே மருந்தி
னியல்பருந்துவோர்க-ளத்தகையரெனினுமவர் பிணியை
நீக்கலெனவெனநுபவத்தையு நீ தவிர்க்காதென்னே-சித்தி
யெலாம்விளங்கு திருக்கழனிவாழுஞ் சிதம்பரதேசிகப்பிரம
தேவதேவே. ... ... (௩)

நெஞ்சிற்கறிவுறுத்தல்.

பித்தனைத்துந்தவிர்த்தாள்பவனென்னப்பெருமறை க
ளொத்தனைநன்மொழிகூறினுங்கேட்டிலையேழை நெஞ்சே
கத்தனைமோகவிருட்குமெய்ஞ்ஞானக்கதிரனை ன்
சித்தனைநந்தஞ்சிதம்பரதேசிகதேவனையே (௧)

வீணிலைநந்தஞ்சிதம்பரதேவனைவேண்டலென் று
காணிலைகண்டுகளித்திலையன்னோன்கழல்சிரத்தி ற்
பூணிலைபூண்டவர்போனடிக்கின்றனைபொய்ம்மைநெஞ்சே
நாணிலையென்செய்வையந்தோமரணம்நணுகிடினே (௨)

மரணத்தொடுபவமற்றார்களென்றுமறைமொழியை த்
திரணத்தளவெனினுமதித்தாயிலைதீமைநெஞ் சே
கரணத்தினந்தஞ்சிதம்பரதேவன்கமலமென்பூ ஞ்
சரணத்தையன்பொடுதாங்கிப்புகழ்ந்திடுஞ்சாந்தர்களே (௩)

சற்குருதுணை.